For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• ஜனவரி 2024

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 44













christianhistoricalsociety.in

2024 HAPPY NEW YEAR

# ஆசிரியர் சுவடு

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாசகர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

2024-ம் ஆண்டு பிறந்திருக்கிறது. "புத்தாண்டு மங்களம்" "புதிய ஆண்டு தோத்திரம்" என்ற வாழ்த்துக்கள் எங்கும் ஒலிக்கின்றன. இச்சுபதினத்தில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தனது நண்பர்களுக்கும், வாசகர்களுக்கும் தனது வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதம் நமது வாசகர்கள் பேரிலும், அவர்கள் குடும்பங்கள் பேரிலும், அவர்கள் செய்கின்ற வேலையிலும், அனைத்து முயற்சிகளிலும் இருப்பதாக. நம் ஒவ்வொருவருடைய மகிழ்ச்சியின் நேரங்கள் இயேசு கிறிஸ்துவில் மகிழ்ந்து இருப்பதாக. நம்முடைய துன்பவேளையில் அவர் நம் துணை நின்று ஆறுதல் அளிப்பாராக. இவ்வருஷம் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் வழி நடத்துதல் நம் அனைவரோடும் நமது வரலாற்றுச் சங்கத்தொடும் இருப்பதாக.

இப்புதிய ஆண்டில் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க இடத்தில் நடைபெறும் கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு வேலை நடைபெற்று வருகின்றது. கட்டிடப் பணிகளுக்கான தேவைகள் சந்திக்கப் பட ஜெபித்துக்கொள்ளுங்கள்.

எனவே உறுப்பினர்கள், தொடர்ந்து வரலாற்றுச் சங்க பணிகளுக்காக ஜெபிக்கவும், வாசகர்கள் இம்மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்தவும் கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை பிரிண்ட் செய்து வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, மாத சந்தாவை புதுப்பித்து கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாரபரனின் பணியில்

*Manna Selvakumar*

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்
சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

G Pay

சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,
இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு


ஆசிரியர்
கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001


தொடர்புக்கு +91 91767 80001
christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com


christianhistoricalsociety.in
tchsportal.co.in



# நிலைமை அதேதான் .. நம் செயல் ?

154 ஆண்டுகளுக்குமுன், 1869-ம் வருடம் அக்டோபர் மாதம் 31-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை, மாலை மூன்று மணிக்கு வானம் இருண்டு இடியுடனும் மின்னலுடனும் தொடர்ந்து விடாது பெய்யத் தொடங்கின. மழை இரவு முழுவதும் தொடர்ந்து பொழிந்தது. அன்று பாளையங்கோட்டை பரி. திரித்துவ ஆலயத்தில் ஞாயிறுதோறும் நடக்கும் மாலை 6 மணி ஆராதனையை ரத்துப்பண்ண வேண்டியதாயிற்று. திங்கட்கிழமை மழையில்லை. செவ்வாய்க்கிழமையில் காலையில் மட்டும் மழை. அன்றிரவு 9 மணிக்குப் புயல் காற்று வீசவாரம்பித்து, 2-மணி வரை அதி பயங்கர வேகத்துடன் வீசி ஏராளமான மரங்களைச் சாய்த்துவிட்டது. அது நின்றதும், 'சோ' வென்று ஊற்றத்தொடங்கிய மாரி, திருநெல்வேலி மாவட்டத்தின் பரப்பு முழுவதிலும் பரந்து பெய்தது. புதன், வியாழன், வெள்ளி - மூன்று நாட்களாகியும் அது ஓயவேயில்லை. ஆற்றில் பெருவெள்ளம். சிந்துபூந்துறை, மீனாட்சிபுரம், வண்ணார்பேட்டை - இவ்வூர்களினுள் புதன்கிழமை மாலைக்குள் ஆற்றுவெள்ளம் புகுந்துவிட்டது. இரவுக்குள் அது பாளையங்கோட்டைக்குள் பிரவேசித்து தற்கால மேரி சார்ஜன்ட், கதீட்ரல், பிஷப் சார்ஜன்ட் பள்ளிக் கூடங்களினுள் புகுந்தது. வியாழனில் திருநெல்வேலி நகரில் இரண்டடித் தண்ணீர்!. பாளையங்கோட்டையில் ஓரடி. புதனிரவில் ஆற்றுப் பாலத்தின் கீழ்பக்கத்து வளைவுகள் ஆட்டங் கொடுத்தன. ஆனாலும் விழவில்லை. வியாழன் மாலை திரித்துவ ஆலயத்தின் முகப்பு மண்டபம் பயங்கரத் தொனியுடன் இடிந்து விழுந்தது. பெண்கள் பள்ளியின் காம்பவுண்டுச் சுவரும் சரிந்தது. பாளையங்கோட்டை - வீரராகவபுரம் - திருநெல்வேலிப் பெருஞ்சாலையில் இடுப்பளவு தண்ணீர் ஓடினது. மரங்களனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாய்ச் சரிந்து விழுந்தன.



வெள்ளிக்கிழமை மாலையிலிருந்து மழை ஒய ஆரம்பித்த தெனினும், நவம்பர் 16-ம் தேதிவரை நாள்தோறும் விட்டு விட்டுப்பெய்து, 17-ம் தேதிமுதல் மறுபடியும் பலத்துக் கொண்டது. இம்முறை அது எட்டு நாட்கள் தொடர்ந்து பொழிந்துகொண்டேயிருந்தது. முன்போலவே, மாவட்டத்தில் எத்திக்கிலும் அப்பெருமழை விளைவித்த அழிவு கணக்கிலடங்காது. நம்பியாறு ஏர்வாடி (புதுப்) பாலத்தை அதன் அஸ்திபாரங்களுடன் அரித்துக்கொண்டு போயிற்று. தாமிரபரணி சுலோச்சன முதலியார் பாலத்தின் கீழ்பாதியை இழுத்துச் சென்றது. அவ்வாறே நெல்லை நாடெங்கும் சிறு சிறு ஓடைகளுங்கூடத் தம்மீது கட்டப்பட்டிருந்த பாலங்களையும் வாராவதிகளையும் உடைத்து நாசமாக்கின. அப்பெருமழையினால் துயருக்குள்ளானவர்கள் அனேகம்.

நவம்பர் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு ஊருக்குள் வெள்ளம் பெருக்கெடுத்தது. 20-ம் தேதி சனிக்கிழமை மத்தியானம் குருவானவரின் வீடு விழுந்துவிட்டது. வீட்டின் ஆபத்தை சற்றுமுன் கண்டுணர்ந்த ஞானப்பிரகாசம் ஐயர் தன் குடும்பத்துடன் மிஷனெரிமார் தங்குவதற்காக கட்டப்பட்டிருந்த பங்களாவினுட் சென்று தப்பினார். விழுந்த வீட்டை வெள்ளம் அரித்துச்சென்றது. பொருட்களனைத்தும் நாசமாகிவிட்டன. அவற்றிற் பல வெள்ளத்துடன் போய் விட்டன.

அன்று மாலை தொடங்கி கிராமத்தில் பல வீடுகள் திடீர் திடீரென்று விழுந்தன மழையும் விட்டபாடில்லை. தண்ணீர் ஏறிக்கொண்டே போயிற்று. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி குழந்தைகுட்டிகளுடன் கல்லாலான வீடுகளில் அடைக்கலம் புகுந்தனர். தண்ணீர் அவற்றுக்குள்ளும் ஏறிவிடவே, அவ்வீடுகளின் மச்சுகளிலும் முகட்டிலும் ஏறித் தப்பித்தனர். கல் வீடுகளும் ஒரளவு சனத்தை மட்டுமே ஏற்கக்கூடும். கிறிஸ்தவர்களநேகரும், புறமதத்தினர் பலரும் பங்களாவிலும் கிறிஸ்தவ தேவாலயத்திலும் தஞ்சம் புகுந்தார்கள். வாலிபர் பலர் ஆலமரங்களிலும் மற்றப்பெரிய மரங்களிலும் ஏறிக்கொண்டார்கள். இரவு வந்தது. மழையோ ஓயவில்லை.

மறுநாள் ஞாயிறு, அன்றும் அதே நிலைமைதான். அன்று மாலை பங்களாவின் சுவர்கள் பல விடங்களில் கீறின. எந்த நேரம் அதுவும் விழுந்துவிடுமோவென்ற அச்சம் மக்களை பிடித்துக்கொண்டது. தேவாலயத்தைச் சுற்றிலும் ஓடிக் கொண்டிருந்த பிரவாகம் அதன் அஸ்திபாரத்தை அரித்ததினால், அதுவும் எவ்வேளையில் விழுமோவென்ற பயம் அதில் தஞ்சமடைந்தவர்களைப் பிடித்துவிட்டது. மழையும் ஓயவில்லை, இரவும் வந்தது. மக்களிலொருவரும் அன்றிரவும் தூங்கவில்லை.

திங்கள் காலை மழை நின்றது. வெள்ளம் வடியவாரம்பித்தது. பிற்பகலில் சனங்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பினர். அங்கு அவர்கள் கண்ட அழிவு!. நாசம்! வர்ணிக்கவியலாது. போய்விட்டன, எல்லாம் போய்விட்டன. ஊரில்தானப்படியென்றால், வெளியே?. எல்லாம் பாழ்! வயல்கள், தோட்டங்கள், துரவுகள் எங்கும் மணலும், சகதியும், சேறும்!. நெடிய பனைகள் தரையோடு தரையாய் கிடந்தன. மரங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டிருந்தன. இடையர்காடு கிராமம் தன் வாழ்க்கையைத் திரும்ப ஆரம்பிக்க வேண்டிய நிலைமை.

1902 ம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தால் தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அநேக கிராமங்கள் நீரில் மூழ்கின. பல கிராமத்து குளங்கள் உடைந்து ஆயிரக்கணக்கான ஆடுகள், மாடுகள் வெள்ளத்தில் பலியாயின. இந்நிலையில் உயிர்கொல்லி நோயான காலராவும் (காலரா 19 ஆம் நூற்றாண்டில் மிக அதிகமாக பரவிய நோயாகும். இது பல மில்லியன் கணக்கான மக்களைக் கொன்றது.) பரவ ஆரம்பித்து, பல கிராம மக்களை காவு வாங்கியது. எங்கு திரும்பினாலும் மரண ஓலங்களின் சத்தம். வெள்ளத்தில் மரித்தவர்களின் உயிரற்ற சடலங்களும் கரை ஒதுங்கியது. காலரா நோயினால் நாசரேத் பகுதிகளில் 25% மக்கள் பலியானார்கள். அநேக கிறிஸ்தவர்களும் மரித்துப்போனார்கள். பல பிள்ளைகள் அனாதைகளாக்கப்பட்டனர். ஆற்றுவாரும், தேற்றுவாரும் இன்றி மக்கள் அழுது புரண்டனர்.

1917 ஆம் ஆண்டில் திருநெல்வேலி டவுன் மற்றும் தாமிரபரணி ஆற்றின் இருபுறமும் உள்ள அண்டை கிராமங்களிலும், நகரத்தின் மையப்பகுதி வழியாக ஓடும் கால்வாயிலும் காலராவின் மிக மோசமான தொற்றுநோய் வெடித்தது. சடலங்கள் ஓடையில் மிதந்தன வடிகால்களில் கிடந்தன. தெருவெங்கும் மரணம். நகராட்சி மன்றம் தயாராக இல்லை, அரசாங்க சுகாதாரத் துறையும் சில தனியார் மருத்துவர்களாலும் நோயின் ஆவேச தாக்குதல்களைச் சமாளிக்க முடியவில்லை. மருந்தகங்களில் உள்ள ஊழியர்கள் ஆபத்துக்கு ஆளாகினர். மருந்துகளால் பயனில்லை, போதுமானதாகவும் இல்லை.

திருநெல்வேலியில் அந்த நேரத்தில் செல்வின் என்ற ஒரு இளம்மிஷனரி(30வயது)மற்றும்இறையியல்ஆசிரியர்இருந்தார் - மற்றவர்களில் சிலர் செய்ததைப் போல தொற்றுநோயிலிருந்து தப்பிக்க விவேகத்துடன் விடுமுறை எடுக்காமல் அவர் செயலில்



குதித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 'அவர் கைவிடப்பட்ட அல்லது புறக்கணிக்கப்பட்ட நோயாளிகளிடையே சென்று நூற்றுக்கணக்கான காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்றுகிறார். அந்த நாட்களில் தடுப்பூசி கேட்கப்படாதது, அவர் பொட்டாசியம்

பெர்மாங்கனேட் மற்றும் பிரார்த்தனை சக்தியுடன் மட்டுமே செயல்பட்டார். அவர் வீடுகளுக்குள் நுழைந்தார், நோயாளிகளை பராமரித்தார், குளிர்ந்த கைகால்களைத் தேய்த்தார், வயிற்றுப்போக்கினால் அழுக்கடைந்த ஆடைகளை சுத்தம் செய்தார், அரிசி கஞ்சி செய்து நகர்ந்தார் என்று கூறப்படுகிறது. அவரது செயல்களின் விளைவைக் கண்டவுடன் விரைவில் ஒரு குழுவினர் அவருடன் சேர்ந்து கொண்டனர். செல்வின் அதிசய சுகமளிக்கும் வல்லமை உடையவர் என்று புகழப்பட்டார்.

திருநெல்வேலி நகரத்தின் தலைவரும் கவுன்சிலர்களும் காலரா தொற்று முடிந்தபின் செல்வினை கவுரப்படுத்த திருநெல்வேலி பிரதான சாலை வழியாக ஊர்வலமாக (அலங்கரிக்கப்பட்ட கோயில் யானையுடன்) சென்றனர். ‘உடல் மற்றும் ஆன்மாவின் மருத்துவர்’ என்று அவருக்கு திருநெல்வேலி மக்களால் மதத்தின் தடைகளைத் தாண்டி பட்டம் வழங்கப்பட்டது. காலரா தொற்றுநோய் தொடர்பாக அவரது உன்னதமான பணிகளைப் பாராட்டும் விதமாக கவுன்சிலர்கள் அவரை தங்கள் தலைவராகக் கோரினர்.

மற்றொரு எழுத்தாளர் 1917வுக்கு முன் மதுரை மற்றும் திருநெல்வேலியில் சிலர் சேர்ந்து ‘செல்வின் சங்ரா சங்கம்’ உருவாக்கினார்கள் என்று குறிப்பிடுகிறார் - ஏனெனில் செல்வினின் நட்பும் தயவும் பல இளைஞர்களை அவரது பிரசங்கத்தைக் கேட்க ஈர்த்தது. ஜார்ஜ் தியோடர் செல்வின் சுமார் 25 ஆண்டுகளுக்கு பிறகு திருநெல்வேலியின் பிஷப் ஆனார். திருநெல்வேலியைச் சேர்ந்த பல கிறிஸ்தவர்கள் அவரின் நினைவாக செல்வின் அல்லது தியோடர் என்ற பெயர்களைக் கொண்டுள்ளனர்.

## 1992 வெள்ளம்

1992-ம் ஆண்டில் இந்த மாவட்டங்கள், அதற்கு முன் இல்லாத வகையில் கடும் வெள்ளப் பாதிப்புகளை சந்தித்தது. 1992-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புயல்வெள்ளம் ஏற்பட்டது. அந்த ஆண்டு நவம்பர் 13-ம் தேதி பாபநாசம் அணைப் பகுதியில் 310 மி.மீ. மழையும், சேர்வலாறு அணைப் பகுதியில் 210 மி.மீ., பாபநாசம் கீழ்அணைப் பகுதியில் 190 மி.மீ., மணிமுத்தாறு அணையில் 260 மி.மீ. என்று வரலாறு காணாத வகையில் மழை கொட்டியிருந்தது.

இதனால் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளுக்கு கட்டுக்கடங்காத காட்டுவெள்ளம் வந்தது. அணைகள் உடையும் அபாயத்தை தவிர்க்க அன்று நள்ளிரவில் அணையை திறந்துவிட்டனர். 1992 தாமிரபரணி ஆற்று வெள்ளம் என்பது 1992 ஆம் ஆண்டு நவம்பர் 13 அன்று தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தைக் குறிக்கிறது. இந்த வெள்ளத்தின் காரணமாக விக்கிரமசிங்கபுரத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் 1810, 1827, 1869, 1874, 1877 (இருமுறை), 1880, 1885, 1914, 1923, 1925, 1931, 1992 ஆண்டுகளிலும், 1847இல் கோடையிலும் வெள்ளம் ஏற்பட்டன. இந்தியாவில் மழைப்பொழிவு தொடர்பாக 1879இல்



எலியட், 1886இல் பிளன்ஃபோர்டு போன்றோர் முன்னெடுத்த ஆய்வுகளிலும் பிரிட்டிஷ், இந்திய அரசுகளின் ஆவணங்களிலும், 1870ஆம் ஆண்டு முதல் சராசரி மழையளவு, வெள்ளத்தின் குறிப்பான மழையளவு தொடர்பான தகவல்கள் கிடைக்கின்றன. 1870-1914ஆம் ஆண்டுகளில் ஜனவரி-மார்ச், ஏப்ரல்-மே, ஜூன்-செப்டம்பர், அக்டோபர்-டிசம்பர் மாதங்களில் முறையே தென்காசியில் 139.192 மி.மீ., 129.54 மி.மீ., 240.03 மி.மீ., 515.366 மி.மீ., தூத்துக்குடியில் 65.024 மி.மீ., 63.246 மி.மீ., 28.194 மி.மீ., 405.13 மி.மீ., மழையும் சராசரியாகக் கிடைத்திருப்பது என்பது, மேற்கிலும் கிழக்கிலும் இருக்கின்ற மழையளவின் வேறுபாட்டைக் காட்டுகிறது.(KO.RA)

நெல்லை மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்ட 1877இல் 1,190.244மி.மீ., 1902இல் 1,140.714 மி.மீ., 1891இல் 1044.194 மி.மீ., 1896இல் 989.584 மி.மீ., 1892இல் 389.89 மி.மீ., 1876இல் 409.956 மி.மீ., 1890இல் 435.864 மி.மீ., 1914இல் கடையத்தில் 1,898.142 மி.மீ., தென்காசியில் 1,658.366 மி.மீ., அம்பாசமுத்திரத்தில் 1.624.838 மி.மீ., குலசேகரப்பட்டினம், கடையநல்லூர், திருச்செந்தூர், சிவகிரி பகுதிகளில் 1.270 மி.மீ. மழை பொழிந்தது. தற்போதைய வெள்ளத்தில் தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 946.00 மி.மீ., திருச்செந்தூரில் 689 மி.மீ, குலசேகரப்பட்டினத்தில் 330மி.மீ. மழை பொழிந்தது. இப்புள்ளிவிவரங்கள் 1877-1914ஆம் ஆண்டைவிட தற்போது குறைவான மழை பொழிந்திருப்பதைக் காட்டுகிறது.

நெருக்கடியின் போது மக்களுடன் நிற்கும் கிறிஸ்தவ தலைவர்களின் கதைகள் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றன - ஆர்தர் மார்காஷிஸ், சி டி இ ரேனியஸ் மற்றும் பல. இந்த தன்னிச்சையான இரக்கம் எங்கே போய்விட்டது? நன்கு யோசித்து கவனித்த பின் பரிதாபம் காட்டும் ஆட்களாக மட்டும் மாறிவிட்டோமா?

ரேனியஸ், மர்காஷியஸ். பேராயர் செல்வின் போன்ற மிஷனரிகள் பேராயர்கள் குருமார்கள், நாட்டையர்மார்கள் போன்றோர் அன்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து, மருத்துவம் மற்றும் நிவாரண உதவிகளை செய்து காப்பாற்றினார்கள்.

**நிலைமை அதே தான் .. நம் செயல் ?**

# இந்தியக் கைத்தொழில் முயற்சியில் பண்டிதர்

**ந. சூரிய மூர்த்தி,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**சென்னைப் பல்கலைக்கழகம்**

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ஆங்கிலேயர்களால் அடிமைப்படுத்தப் பட்டிருந்தாலும் மற்றொரு பக்கம் அவர்களின் புதியபுதிய கண்டுபிடிப்புகளாலும் மாற்றுச் சிந்தனைத் திறத்தாலும் பெரிய முன்னேற்றம் கண்டது என்கிற உண்மை சுதந்திரப் போராட்டம் என்னும் பெருஞ்சூரியன் ஒளிமுன் குன்றிப்போன விண்மீன்கள். இரயில் வண்டி, தபால் முறை, நவீன மருத்துவம் முதலான புதிய வரவுகள் ஒட்டுமொத்த இந்தியாவையே புரட்டிப்போட்டுப் பெரும் வளர்ச்சிக்கு வித்திட்ட வரலாறு, அவற்றுள் பருக்கைப்பதம்.

இந்தியாவைத் தொழில் ரீதியாக முன்னேற்ற நினைத்த வரலாறும் உண்டு. அவ்வகையில் 1856 இல் இலண்டனில் பிறந்த ஆங்கிலேய அறிஞர் 'க்ளின் பார்லோ' (Glyn Barlow) குறிப்பிடத்தகுந்தவர். இலண்டன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இவர் முதன்முதலில் இந்தியாவின் உத்தரகாண்ட் மாநில முசோரியில் (Mussoorie) St. George கல்லூரியில் விரிவுரையாளராகத் தன் பணியைத் தொடங்கினார். அதன்பின்னர் 1894இல் சென்னையில் இயங்கிய **'தி மெட்ராஸ் டைம்ஸ்'** பத்திரிகையின் ஆசிரியப் பணியை வகித்தார். 1900த்தில் அப்பணியிலிருந்து நீங்கி, கேரள மாநிலத்தின் கோழிக்கோடு ஜாமோரின் கல்லூரியில் (தற்போது இது ஜாமோரின் குருவாயூரப்பன் கல்லூரி என்றழைக்கப்படுகிறது) மூன்றாண்டுகளும் (1900-1903); பின்பு பாலக்காட்டில் இயங்கி வந்த விக்டோரியா கல்லூரியில் எட்டாண்டுகளும் (1903-1911); அதன்பின்னர், எர்ணாகுளம் மஹாராஜா கல்லூரியில் இரண்டாண்டுகளும் (1912-1914); முதல்வராகப் பணிசெய்தார். மீண்டும் 1914இல் **'தி மெட்ராஸ் டைம்ஸ்'** பத்திரிகையின் ஆசிரியப் பணியில் இணைந்தார்.

விக்டோரியா கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய காலகட்டத்தின்போதே 1904ஆம் ஆண்டு **'இண்டஸ்ட்ரியல் இந்தியா'** (Industrial India) என்னும் ஆங்கில நூலை எழுதி வெளியிட்டார்.

இந்நூல் வெளிவந்த சிறிது காலத்திற்குள்ளேயே உலகளவில் பரவலாகப் பலராலும் அறியப்பட்டது. உலகெங்கிலும் உள்ள மாணவர்கள், ஆய்வாளர்கள், நூலகர்கள் எனப் பலரும் அப்போதைக்கப்போது வெளியாகும் நூல்களையும் இதழ்களையும் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தோடு தொடங்கப்பட்டு இலண்டனிலிருந்து வெளிவந்த LUZAC'S ORIENTAL LIST என்னும் (இருமாதத்திற்கு ஒருமுறை வெளியாகும்) இதழில் ஜூலை – ஆகஸ்டு 1904ஆம் ஆண்டு NEW PUBLICATIONS என்னும் பகுதியில் இந்நூற்பெயர், ஆசிரியர் பெயர், பொருளடக்கம் ஆகியவை வெளியிடப்பட்டன. கல்கத்தாவிலிருந்து PAT. DOYLE, C.E., என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த INDIAN ENGINEERING என்னும் வார இதழ் ஜூலை 30, 1904ஆம் ஆண்டு ஒரு விரிவான நன்மதிப்பீட்டை இந்நூல் குறித்து வெளியிட்டிருந்தது. மேலும் PRITHWIS CHANDRA RAY என்பவர் கல்கத்தாவிலிருந்து நடத்திய THE INDIAN WORLD மாத இதழில் UPENDRA NARAYAN NEOGI என்பவர் இந்நூல் குறித்த மிக நீண்டதொரு விமர்சனக் கட்டுரையை ஜூலை 1906இல் வெளியிட்டுச் சிறப்பித்தார்.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் எல்லாம் உலக அளவில், இந்திய அளவில் அந்நூல் அங்கீகரிக்கப்பட்ட வரலாறு. உலகையே திரும்பிப் பார்க்கவைத்த இப்படிப்பட்ட ஒரு நூல் அச்சானது நமது தமிழகத்தின் சென்னையில் என்றால் வியப்பும் ஆச்சரியமுமே மேலிடுகின்றது.

தமிழகத்தின் அன்றைய மெட்ராஸ் மாகாணத்தில் அந்நூலைத் தனது G. A. NATESAN & CO., என்னும் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிட்டார் G. A. நடேசன் என்று பலராலும் அறியப்பட்ட 'கணபதி அக்ரஹாரம் நடேசன்'. இங்குதான் இந்நூல் முதன்முதலில் அச்சேறுகின்றது. அச்சிடப்பட்டது மட்டுமின்றி G. A. நடேசன் நடத்திய THE INDIAN REVIEW என்னும் மாதப் பத்திரிகையில் இந்நூல் பற்றிய கட்டுரை வெளியானதும் இங்குச் சுட்டத்தக்கது. ஜூலை - 1904 வெளியீட்டில் இந்நூல் குறித்த விரிவானதொரு கட்டுரையை R. Ch. Dutt (Romesh Chunder Dutt) என்னும் பொருளாதார அறிஞர் எழுதிச் சிறப்பித்தார்.

இலண்டனில் பிறந்து பின்னாளில் இந்தியா வந்த க்ளின் பார்லோ என்னும் ஆங்கிலேய அறிஞரின் நூலை வெளியிட்டார் தமிழகத்தைச் சார்ந்த G. A. நடேசன். 1915இல் தன் மனைவியுடன் முதன்முதலில் சென்னைக்கு வந்த காந்தி ஏப்ரல் 17 முதல் மே 8 வரை தங்கிய இடம் தம்புச்செட்டித் தெரு, ஜார்ஜ் டவுனில் அமைந்த G. A. நடேசனின் வீட்டில்தான் என்பதும் சுட்டத்தக்கது. இத்தகு பெருமைமிகுந்த வரலாற்றைக் கொண்ட தமிழருக்கும் ஆங்கிலேயருக்கும் என்ன தொடர்பு?

சென்னை மவுண்ட் ரோட்டில் அக்காலத்தில் இயங்கிவந்த The Madras Times என்னும் பத்திரிகையின் ஆசிரியராக 1894இல் பணியிலமர்ந்த க்ளின் பார்லோ 1900 வரை அப்பொறுப்பினை வகித்தார். 1897இல் தனது பதிப்பகத்தைத் தொடங்கினார் G. A. நடேசன். 1894 தொடங்கி 1897 வரையிலான நான்கு ஆண்டிற்குள்தான் இருவருக்குமிடையே பழக்கம் ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்திற்குள்ளாகத்தான் க்ளின் பார்லோவின் நெறியாளுகையின்கீழ் The Madras Times அலுவலகத்தில் அவருக்கு இந்திய உதவியாளராகப் பணிபுரிந்தார் G. A. நடேசன். இதனை, க்ளின் பார்லோவே (ஆண்டு குறிப்பிடாமல்) பின்வருமாறு எழுதியிருந்தார்,

Time flies fast indeed. In my mind's eye I see–as if it were yesterday–G. A. Natesan,a bright-eyed lad, seated beside me as my Indian assistant in the office of the Madras Times – see him so clearly that I find it difficult to realise that The Honourable Mr. G. A. Natesan completes his sixtieth year".

(Sixty years after, Souvenir of the Sashtiabdha – Poorthi of the Hon. Mr. G. A. Natesan, 24th August, 1933, ப. 49.)

G. A. நடேசனின் அறுபதாம் அகவை கொண்டாட்டத்தின்போது வெளியான நூலில் தெளிவாகக் குறித்திருந்தார் க்ளின் பார்லோ. ஆரம்பகாலப் பத்திரிகைத்துறை வாழ்க்கையை க்ளின் பார்லோவிடமிருந்துதான் தொடங்கினார் நடேசன். அதன்பின்னர்தான் 1897இல் பதிப்பகத்தையும் 1900இல் தனது **The Indian Review** என்னும் மாத இதழை ஆங்கிலத்திலும் தொடங்கி நடத்தினார். 1900ஆவது ஆண்டிற்குப்பின் **The Madras Times** பத்திரிகையின் ஆசிரியப் பதவியிலிருந்து வெளியேறிய க்ளின் பார்லோ, தான் எழுதிய **Industrial India** என்னும் நூலை நடேசன் நிறுவனத்தின் வாயிலாக 1904இல் வெளியிட்டார்.

இப்படி மிகப்பெரிய வரலாற்றுப் பிண்ணனி கொண்ட நூல் வெளியிட்ட மூன்று ஆண்டுகளில் 1907ஆம் ஆண்டே மொழிபெயர்க்கப் பட்டுவிட்டது. தஞ்சை முன்சீப்கோர்ட்டில் ஹெட்கிளர்க்காகப் பணிபுரிந்த T. R. சீனிவாச ஐயங்கார் என்பவர் **“இந்தியக் கைத்தொழில் முயற்சி”** என்னும் பெயரில் இந்நூலை மிகநேர்த்தியாக மொழிபெயர்த்துள்ளார். மொழிபெயர்க்கப்பட்ட இந்நூலுக்கு அக்காலத்தில் தஞ்சையில் விவசாயம், கால்நடைப்பண்ணை, சித்த மருத்துவம் முதலான தொழில்களில் மிகப்பெரிய வளர்ச்சியை எட்டிப் புகழ்படைத்த ஆபிரகாம் பண்டிதர் 15-07-1907 அன்று ஒரு அணிந்துரையை வழங்கியுள்ளார். அது தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அவ்வுரையாவது,

“இவ்வூர் முன்சீப்கோர்ட் ஹெட்கிளர்க் ம- M.M - ஸ்ரீ T. R. சீனிவாச ஐயங்காரவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட **“இந்தியக் கைத்தொழில் முயற்சி”** என்னும் இச்சிறிய புத்தகத்தைப் பார்வையிட்டேன். இதிலடங்கிய விஷயங்கள் யாவும் இலகுவான இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதைப்பார்க்கும் தமிழ் அபிமானிகள் ஒவ்வொருவரும் சந்தோஷிப்பார்களென நம்புகிறேன். அந்நிய பாஷையில் எழுதப்பட்டிருக்கும் நூல்களைத் தமிழ்ப்படுத்துவோர் கருத்துகளைத் தெளிவாய் விளக்குவிக்க ஏற்ற தமிழ்ப் பதங்களிருந்தும் அறிந்துகொள்ளாமல் பல அன்னிய பாஷைகளின் சொற்களைக் கலந்தும் கருத்தை வெளிப்படுத்த முடியாமல் தத்தளிக்கும் இக்காலத்தில், கூடியவரையில் ஆங்கில நூலின் கருத்து தெளிவாய் விளங்கும் வண்ணம் மொழிபெயர்த்திருப்பது ஐயங்காரவர்களின் தமிழ்ப் பயிற்சியின் வல்லமையை நன்றாக வெளிப்படுத்துகின்றது. சிறியவர் முதல் பெரியவர் வரையும் இந்நூலின் பயனை எளிதாகத் தெரிந்துகொள்ளும்படி செய்த இத்தமிழ்மொழி பெயர்ப்பாசிரியருக்குத் தமிழ்நாட்டாரனைவரும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.”

ஆபிரகாம் பண்டிதரின் இவ்வணிந்துரையேயன்றித் தஞ்சையைச் சேர்ந்த S. சோமசுந்தரம் பிள்ளை (அறுசீர் விருத்தப் பாடலாக), ஆகியோரின் எழுத்துகள் மட்டுமே தமிழில் அமைந்துள்ளன. K. S. சீனிவாசன் முதலானவர்களின் அணிந்துரைகள் யாவும் ஆங்கிலத்தில் அமைந்தவை.

T. R. சீனிவாச ஐயங்கார் தஞ்சையைச் சார்ந்தவர், அவரது நூலுக்குப் பண்டிதர் அணிந்துரை வழங்கினார். பண்டிதர் தொழில்துறைகளில் சிறந்து விளங்கி, கோலோச்சினார் என்பதை அக்காலத்தில் அறியாதார் இல்லை. தக்கதொரு இடம்கண்டே அணிந்துரையை வாங்கியுள்ளார் என்பதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் இதோடு வரலாறு நின்றுவிடவில்லை.

பண்டிதரால் தொடங்கப்பட்ட தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் சகாயராக இருந்தவரும் சபைக்கு வந்து கலந்துகொண்டவருங்கூட T. R. சீனிவாச ஐயங்கார். கருணாமிர்த சாகரத்தின் முதற்பாகத்தில் “சங்கத்திற்கு சகாயராயிருப்போரில் சபைக்கு வந்திருந்தவர்கள்” என்னும் பட்டியலிலும் (ப. 253, முதற்பதிப்பு) 1916ஆம் ஆண்டு நடைபெற்ற ஏழாவது கான்பரென்சில் ஆஜராகியிருந்தவர்கள் பட்டியலிலும் (ப. 1142, முதற்பதிப்பு) அவரது பெயர் இடம்பெற்றுள்ளது.

பண்டிதரின் சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு 1912. இந்தியக் கைத்தொழில் முயற்சி நூல் வெளியான ஆண்டு 1907. எனில், சங்கத்தில் கலந்துபழகும் முன்னரே இருவரும் ஒருவரையொருவர் அறிந்தவர்களாக; ஒருவர் மதிப்பை மற்றவர் நன்கு தெரிந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதே இதனால் அறியலாகிறது.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னர் வெளியாகி உலகளவிலும் இந்திய அளவிலும் தமிழக அளவிலும் அறியப்பட்டதொரு ஆங்கிலேயரின் நூல். அந்நூலை வெளியிட்டவர் இந்திய விடுதலையின் நம்பிக்கையாக விளங்கிய காந்தியோடு நெருங்கிப் பழகியவர். வெளியான மூன்று ஆண்டுகளில் தமிழகத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இப்படி மிகநீண்ட வரலாறு கொண்ட நூலின் முகப்பில் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் எழுத்து இடம்பெற்றிருப்பது அவரது நெடிய புகழ்படைத்த வாழ்வினை மீண்டும் ஒருமுறை வியந்து பார்க்கவைக்கிறது.



# நியமிக்கப்பட்ட இந்திய போதகர் குடும்பம்

**ரேச்சல் பிரதீபா**
மதுரை

மதுரை ஜில்லாவின் மேலூர் தாலுக்கின் மூத்த முதன்மையான போதகராய் ஜீவித்தவர் மாசிலாமணி சவரிமுத்துபிள்ளை திரித்துவதாசன். அவரின் பெயர்காரணம் அவரின் வாழ்க்கை பாதையாயிருந்த திரித்துவத்தின் பாதையை சித்தரிக்கிறது. இவரின் நிமித்தமாகத்தான் தென்னிந்திய திருச்சபையில்மதுரை-இராமநாதபுரம்திருச்சபை? பான்மையான சபை என்ற அங்கீகாரத்துடன் திகழ்கிறது. 1862ஆம் ஆண்டு திருநெல்வேலி ஜில்லாவை சேர்ந்த புலவனூரில் பிறந்த இவரைக் கடவுள் மோசேயை நடத்திய வண்ணம் மதுரைக்கு வழிநடத்தி தனது ஆடுகளை ஒன்றிணைத்தார். அவரின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் பதிப்பிடும் பொறுப்பைப் பெற்ற அவரின் பேத்தியாகிய நான், அதற்குரிய புத்தகங்களையும் ஆவணங்களையும் படிக்கும் போது, '**கிறிஸ்துவின் வழி என் குடும்பம் வாழும்**' என்ற ஐயர் கூறும் வார்த்தையின் உண்மையைக் கண்டு வியப்புற்றேன்; பெருமையும்பட்டேன். இவர் மேலூரின் போதகராக மட்டுமல்லாமல், அதன் தாலுக்போர்டின் முதல் தலைவராகவும் மக்களின் அன்பின்நிமித்தம் பொறுப்பு வகித்தார். அதுபோன்ற பல பதவிகளையும் பொறுப்பேற்றதும் மட்டுமல்லாமல் பல பள்ளிகளையும் மருத்துவமனைகளையும் நிறுவினார். இதன் காரணமாகத்தான், அவர் இறக்கும் தருவாயில், அதாவது 1938ஆம் ஆண்டு, இந்தியா விடுதலையடையும் தருணம் நெருங்கியிருந்ததால், விடுதலையடையும் ஆண்டில் ஐயர் இறந்தபின்நினைவுக்கல்பதிக்கமுடிவெடுக்கப்பட்டது. ஐயர்இறந்து, அதாவது 1939ஆம் ஆண்டு, 8 ஆண்டுகளுக்குபின்தான் இந்தியா விடுதலைப்பெற்றது. புதிய இந்தியாவின் சுதந்திரத்தையும், புதிய நிர்வாகத்தின் வெற்றியின் மகிழ்ச்சியையும், எந்த சோர்வையும் மனத்தளர்ச்சியையும் வெற்றிநடை எதிர்நீச்சல் செய்த மேலூர் தாலுக்கின் சமுதாயம், ஐயரை மறவாமல் இருக்கநேரிட்டதால் அவரின் நினைவுக்கல்லை திட்டமிட்டபடி 1947 ஆம் ஆண்டில், டிசம்பர் மாதம் 14ஆம் தேதியன்று, விமர்சையாக ஐயரின் நினைவாராதனையை மேலூரின் மேரி எல் பிளாக் மெமோரியல் தேவாலயத்தில் நடத்தி பதித்தனர். இந்த நாளை நாங்கள் 75ஆவது இந்தியாவின் சுதந்திரஆண்டையொட்டி நினைவுக்கூறும்வகையில் '**தீ இந்து**' ஆங்கில பத்திரிக்கையில் ஒரு பத்தியாக வெளியிட்டு அனுசரித்தோம்.

இவ்வாறு வாழ்ந்த திரித்துவதாசன் ஐயர் அவர்கள் கூறும் வார்த்தைகள்:

**'நான் அவருக்காகவே ஜீவித்தேன்,**
**நான் அவருக்காகவே சேவகம் செய்தேன்,**
**நான் அவருக்காகவே மரிப்பேன்,**
**கடவுள் நாமம் போற்றுக!'**

இந்த வார்த்தையின் ஆழ்ந்த உணர்வுகளை உணர்ந்த நான், அவரின் தந்தையாராயாகிய, திருநெல்வேலி ஜில்லாவை சேர்ந்த புரொட்டஸ்டண்ட் போதகராக திகழ்ந்த சவரிமுத்துபிள்ளை அவர்களின் வரலாற்று ஆவணங்களைத் தேடினேன். அவரின் வாழ்க்கையைபற்றி எனக்குக்கிடைத்த ஓரிரு தகவல்கள் இக்கட்டான காலத்திலும் ஒரு போதகரின் குணம் எவ்வாறாக அமையவேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக இருந்ததால் அதனை பகிறுகிறேன்.

சவரிமுத்து போதகரைபற்றி ரெவிரெண்டு. எஸ். ஹாப்ஸ் தனது 1844ஆம் அரையாண்டு அறிக்கையில் குறிப்பிடும்போது, அவர் பிரிபரண்டி பாடசாலையில் எழில் ஒரு மாணவராக இருந்தார். அவர் அந்த பாடசாலைக்கு பாளையம்கோட்டையிலிருந்து வந்த புது மாணவர். அதனால்

பாளையம்கோட்டை செமினரியில் தான் கற்றுக்கொண்டிருந்த அனைத்து பாடங்களையுமேயே இங்கும் கற்றார். அவர் இலத்தீன் மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றதால் கிரேக்க மொழியும் பயில ஆரம்பத்திருந்தாராம். பிரிபரண்டியின் முதன்மை குருவானவர் ரெவிரெண்டு ஹாப்ஸிடம் சவரிமுத்து ஒருமனதோடு நேர்மையாக நடக்கும் விசுவாசமும் ஞானமும் நிறைந்த இளைஞன் என்று கூறியுள்ளார். மேலும், அவர் ஊழியத்திற்கு நம்பிக்கையுள்ள திடமான இளைஞனாகத் தேர்ச்சிப்பெற்று மிஷனின் சேவைக்கு உறுதுணையாக இருப்பார் என்று பரிந்துரைத்தாராம். அவ்வாறே சவரிமுத்து சிறந்த போதகராகத் தேர்ச்சிப்பெற்றார்.

போதகர் சவரிமுத்துவின் உற்சாகமான தளராத தாழ்மையான கிறிஸ்துவின் விசுவாசத்தை ரெவிரண்டு. ஜெ. கிரிட்டன் அவர்களின் 1861ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு அறிக்கையில் கூறப்பட்டிருந்த சம்பவத்தின் மூலம் அனுபவிக்கலாம். இந்த சம்பவம் 1860ஆம் ஆண்டு அக்டோபர் 13ஆம் தேதி கிரிட்டன் ஐயர் அவர்கள் பன்னிக்குளத்திலிருந்து கள்ளத்திக்கிணற்றுக்கு மேற்பார்வைக்காகச் சென்றிருக்கையில் நடந்தது. அன்று ஐயர் அவர்கள், 2 கொரிந்தியர் 12:9 இல், கடவுள் கூறும் 'என் கிருபை உனக்குபோதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்' நற்செய்தியை பகிர்ந்தாராம்.

அடுத்த நாள் கடவுளின் திருநாளான ஞாயிற்றுக்கிழமை. ஆதலால் கள்ளத்தி கிணற்றின் பரி.திரித்துவ தேவாலயத்தில் காலை இரு ஆராதனையிலும் மதியம் திருவிருந்து ஆராதனையிலும் பங்கேற்றார். ஆராதனைகளின் ஒழுங்குமுறைமை பாராட்டும்வண்ணம் சிறப்பாக இருந்ததாம். இதனால் உற்சாகமடைந்த ஐயர் மாலை சவரிமுத்து போதகரின் வீட்டு ஜெபக்கூட்டத்திலும் பங்கேற்றுள்ளார். அவர் அன்று மாலை தான் அங்கு கண்ட காட்சிகளையும் அந்த அறிக்கையில் விவரித்தவாறு:

'மாலை குடிசை ஆராதனைக்கு வந்திருந்த ஜனத்தின் கூட்டத்தைக்கண்டு என் மனம் சிலிர்த்தது. ஆண்கள் ஒரு புறம் அமர, பெண்கள் மறுபுறம் அமர சவரிமுத்து போதகரின் வீடு நிரம்பிவழிந்தது. இவர்கள் அனைவரும் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஜெபக்கூட்டத்தை வந்திருந்த பெண் ஒருவர் மதுரா புத்தகத்திலுள்ள கீர்த்தனைகளை மாறி மாறி பாடித் துதிக்க ஆரம்பித்தார். அந்த கீர்த்தனை கிறிஸ்துவின் வாழ்க்கையை போற்றி ஒவ்வொரு சரணமும் **'ஜீசஸ், லார்டு!'** என்ற வரிகளுடன் ஆரம்பித்த பாடல்களாகும். அனைவரும் அந்த பாடல்களை மனதுருகி பாட, சிலர் தங்கள் மனக்கவலையை இடம் மெய்மறந்து கூக்குரலிட்டு ஆண்டவரிடம் பிரார்த்தனை செய்தனர். வேறு சிலர் அவர்களிடமிருந்து தீய ஆவிகள் விலகவேண்டும் என்று மன்றாடி சத்தமாக அழுது கடவுளின் மீட்புக்காக வேண்டினர். அப்பொழுது மன்றாடி ஜெபித்துக் கொண்டிருந்த ஆண் ஒருவர் ஓங்கி பிரார்த்தனை செய்தனர். அவரைத் தொடர்ந்து ஒருவர்பின் ஒருவராக பிரார்த்தனை செய்தார்கள். மாலை ஜெபத்தை முடிப்பதற்குமுன் அவர்களுக்கு பிடித்த வேத பயிற்சியான வேத வசனங்களை ஒருவர் கூக்குரலிட்டுகூற மற்றவர்கள் விறு விறுவென போட்டிபோட்டுக்கொண்டு வாசித்தனர். இதில் அனைவரும் மகிழ்ச்சியாக பங்கேற்றனர்.

இப்பயிற்சிக்கிடையில் இளைஞன் ஒருவன் திடீரென துள்ளிக்குதித்து எழுந்து, பாம்பைபோல வளைந்துக்கொண்டு ஓலமிட்டு கடவுளின் வார்த்தையைக் கரகோஷமாய் உச்சரித்து அறையின் மூலையில் சென்று அமர்ந்தான்.

இந்த நிகழ்வுகள் அனைத்தையும் கண்ட கிரிட்டன் ஐயர் அவர்கள், மேலும் தான் முன்னர் உரையாடிய பெண்ணெனின் நடிப்புப்பொருட்டு தான் அதிலிருக்கும் பொய்மையை உணர்ந்ததால், மிகவும் வருத்தப்பட்டார்; அதை சவரிமுத்து ஐயர் அறியாமல் போவதை உணர்ந்து சந்தேகமும் பட்டார். அதனால் உடனே சுதாரித்துக்கொண்டு அங்கியிருந்த அனைவரையும் அமைதிப்படுத்தி முழங்காலிட்டு கடவுளின் ஆவியானவர் தங்களை எந்த ஒரு சாத்தானின் வீரிய வலையிலும் சிக்கிக்கொள்ளாமல் இரட்சிக்குமாறு பிரார்த்தனைச் செய்தும் அனைவருக்கும் அறிவுரையும் கூறி அனுப்பினார்.

அடுத்த நாள், திங்கள் காலை, அக்டோபர் 15ஆம் தேதி, சவரிமுத்து போதகரிடம் கிரிட்டன் ஐயர் தன் மனம்திறந்து நீண்ட உரையாடலில் ஈடுபட்டார். அவரை முதலில் மகிழ்ச்சியடையும் வண்ணம் பாராட்டி பின்னர் சவரிமுத்து போதகரிடம் தனது மனசஞ்சலத்தையும் ஐயங்களையும் கூறினார். அவர் ஞாயிறு மாலை ஜெபவேளையில் நடந்த நிகழ்வுகளைத் தான் சில தினத்திற்குமுன் கண்ட நடுச்சாமத்தில் நடந்த சாத்தான் பூஜையுடன் ஒப்பிட்டு கடிந்து பேசினார். சவரிமுத்து ஐயரிடம், 'உம்மிடமுள்ள ஆவியானது சாத்தானின் ஆவியாகும்' என்று அவரின் தாழ்மையை சோதிக்கும்வண்ணம் கூறினார். இந்த வார்த்தைகளால் மிகுந்த வேதனையுற்ற சவரிமுத்து போதகரைக் கண்டது தனக்கு மிக்க மகிழ்ச்சியை தந்ததென்று குறிப்பிட்டிருந்த கிரிட்டன் ஐயர், சவரிமுத்து போதகரை அனுதாபத்துடன் ஏளனமாய், 'பாவம் அவன்!' என்று குறித்திருந்தார். அதற்கு சவரிமுத்து போதகர் கிரிட்டன் ஐயரிடம் மனம் நொந்து, 'அவ்வாறு தயவுகூர்ந்து கூறாதிருங்கள்! எனக்கு அவ்வாறு இருக்கக்கூடாது என்று ஜெபியுங்கள்! இல்லை, இல்லை, அவ்வாறு இருக்க இயலாது!' என்று விசனப்பட்டு புலம்பிய வார்த்தை மறவாது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் கிரிட்டன் ஐயர், சவரிமுத்து போதகரிடம் தனது கடமையைச் செய்யத்தடைச் செய்யக்கூடாது என்று நேர்த்தியாகப் பேச, போதகர் உடனே, **'ஐயரே! இது அத்தனையும் உண்மை ஐயா! என்னை நம்புங்கள் ஐயா!'** என்று கூறி தனது விவிலியத்தில் (Acts xx-:28?) திமோத்தி 4:2 வசனத்தை, 'எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு புத்திசொல்லு' மேற்கோளிட்டு, 'எனக்காக ஜெபியும், ஐயா!' என்று வேண்டினாராம். இதனால் மனமுவந்த கிரிட்டன் ஐயர் அவர்கள் சவரிமுத்து ஐயருடன் சகோதர மனதோடு நீண்ட ஆலோசனையில் ஈடுபட்டார். கிரிட்டன் ஐயர் தந்த ஆலோசனை: **'நீ ஒரு மாதம் ஜெப வேளையில் அமைதிகாத்து பேசாமல் பிறர்**

**ஜெபிக்க வேடிக்கை செய். உன் மனம் பொங்கும் சமயம்மட்டும் ஜெபத்தில் பேசு.' மேலும், 'தனிமையில் ஆழ்மனதில் அதிக ஜெபம் பண்ணு. இதன்மூலம்தான் சபையை வேதாகமத்தில் அதிகம் ஈடுபடுத்த முடியும்.'** பின்பு கிரிட்டன் ஐயர் சவரிமுத்து போதகருக்காக ஜெபித்தார். அன்று சவரிமுத்து போதகர், கடவுளின் பிரியமான பிள்ளையாக ஜீவிக்கிறார் என்று கிரிட்டன் ஐயர் உணர்ந்தார். அவரிடமிருந்து பொங்கும் ஞானமானது யாரும் கற்றுக்கொடுத்ததுமல்ல; யாரும் சொல்லிக்கொடுத்ததுமல்ல என்பதையும் உணர்ந்தார். அவர் புறஜாதியார் மத்தியில் வாழும் வைராக்கியமுள்ள போதகராக திகழ்கிறார் என்று குறிப்பிட்டிருந்தார். மேலும் இவரின் வாழ்க்கையின் அடிக்கல் எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவைத்தவிர வேறு யாரிருக்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனை வாசித்த நான் இந்த இக்கட்டான கிறிஸ்தவர்களின் வாழ்க்கைக் காலத்தில் எப்பேர்பட்ட போதகர்களாய் நம் போதகர்கள் திகழவேண்டும், என்ன செய்ய வேண்டுமென்று இதனைப் படித்தால் அறிவார்கள் என்பதை உகந்தேன்.

இயேசுவின் பிள்ளையான சவரிமுத்து போதகரின் ஐந்தாவது புதல்வன்தான் மதுரா தாலுக்கின் ஏழைப்பங்காளன், மலர்முகவண்ணன், உத்தமவள்ளல், பார்புகழ்வீரன் என்றெல்லாம் அன்புவார்த்தைகளால் சூடப்பெற்ற திரித்துவதாசன் போதகர் என்றறிவோம். திரித்துவதாசன் ஈன்றெடுத்த பிள்ளைகளில், இருகுமாரன்கள் மதுரை-இராமநாதபுரம் திருச்சபையின் மூத்த போதகர் ஆவார்கள். ஒருவர் அருப்புக்கோட்டை திருச்சபையின் போதகர் சங்கை எட்வர்டு பால் என்பவராவார். மற்றவர் திருமங்கலம், பழனி, மற்றும் மேலூர் திருச்சபையின் போதகர் சங்கை சார்லஸ் சாம்சன் ஆவார். இவர்களின் சேவைகளும் எண்ணிலடங்காவதைகள். சங்கை சார்லஸ் அவர்களின் மூத்தக்குமாரன் நேர்த்திக்கு பெயர்பெற்று அமெரிக்கன் மிஷனரிகளின் மத்தியில் பணிபுரிந்த திரு. ஹொர்பர்ட் சார்லஸ் ஆவார். இவர் அமெரிக்கன் மிஷன் இந்திய நாட்டின் கடைசி சகாப்தத்தில் மூத்த எழுத்தாளராகவும் மேற்பார்வையாளராகவும் கிறிஸ்த்துவ வைராக்கியத்தில் அவர்களுக்கு உடந்தையாயிருந்து எந்தவொரு மனக்கசப்புமில்லாமல் தங்கள் நாட்டிற்கு திரும்பிச்செல்லவும் இன்றும் இந்திய நண்பர்களுடன் உறவாடி மகிழும் வகை மத்தியாராகயிருந்து உதவியவர். இதோடுமட்டுமல்லாமல் திரித்துவதாசனின் மனைவியார் ஜீவரத்தினம்மாளின் தமையனும் தமையன்வழி குடும்பத்தினரும் கிருஸ்துவ ஊழியத்தில் ஈடுபாடோடிருந்தவர்கள்.

இவை அனைத்தையும் அறிந்துகொண்ட நான் கடவுளின் நடத்துதல்களை சந்தேகிக்க முடியுமா? நான் இந்திய கிறிஸ்துவ வரலாற்றில் இடம்பெற்ற சிறப்புமிக்க குடும்பத்தில் பிறந்தவள் என்பதில் பேரானந்தமிருந்தாலும் அதன் எதிர்நீச்சல்களையும் நன்கறிவேன்.


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com




## வரலாற்றுச் சிறப்புமிக்க திருச்சிராப்பள்ளி

# புனித ஜான்ஸ் தேவாலயமும் கல்லறைத் தோட்டம்

– ஒரு வரலாற்றுப் பார்வை

**ஜே.பர்னபாஸ்**
**சேலம் வரலாற்றுச் சங்கம்**

**தன்பக்கம் ஈர்க்கும் தாபரம்:**

திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த புனித யோவான் தேவாலயம் (C.S.I. St. John's Church) மற்றும் பழமையான பிரிட்டிஷார் கல்லறைகள் (Old British Cemetery) இன்று உள்நாட்டு மற்றும் சர்வதேச வரலாற்று ஆர்வலர்களை தன்பக்கம் ஈர்க்கிறது.

1816ஆம் ஆண்டு இந்திய துணைக் கண்டம், தென்கிழக்கு ஆசியா, ஆஸ்திரேலியா பெருந் தீவுக் கண்டம், நியூசிலாந்து தீவுகள், மற்றும் தென் பசிப்பிக் பெருங்கடல் தீவுகள் ஆகியவற்றிற்கெல்லாம் பேராயராக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் முதன் முதலாக நியமிக்கப்பட்ட பேரருட்திரு மிடில்டன் ஐயரவர்களால் (Rt.Rev.Middleton, First Bishop of Calcutta) இந்த புனித யோவான் தேவாலயம் (St.John's Church, Tiruchirappalli) மங்கலப்படைப்பு செய்யப்பட்டு திறக்கப்பட்டது. இதைத் தெரிவிக்கும் அதே கல்வெட்டு இந்த தேவாலயம் 172 ஆண்டுகளுக்குப் பிறகு 1988 ஆம் ஆண்டு மீண்டும் பழுதுபார்த்து நிலைநிறுத்தப்பட்டு மறுஅர்ப்பணம் செய்யப்பட்டு திறக்கப்பட்டது என்பதையும் தெரிவிக்கிறது. அன்று சென்னைப் பட்டணத்தைத் தாண்டி மத்திய தமிழகத்தில் எழுப்பப்பட்ட ஒரு தேவாலயமாக அது ஐரோப்பியர்களையும், உள்நாட்டு மக்களையும், தன்பக்கம் ஈர்க்கும் வானத்தின் வாசலாக விளங்கியது.

**புனித ஜான்ஸ் தேவாலயத்தில் பதிக்கப்பட்டுள்ள வரலாறு பேசும் பொறிப்புகள்** (Historical Inscriptions at St.John's Church) :

தேவாலயத்தின் உள்ளே நினைவுப் பொறிப்புகள் கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க வெண்கல பட்டயங்கள், பளிங்குக் கற் பலகைகள் ஆகிய இவைகள் கடந்துபோன மாபெரும் பிரிட்டீஷ் சாம்ராஜ்ஜிய போர்களையும், அவற்றில் மாண்டுபோன வீரர்களையும் நினைவுபடுத்துகிறது. அதுமட்டுமல்லாது உள்நாட்டு வரலாற்று நிகழ்வுகளிலும், தங்கள் பணிகளிலும், மாண்டுபோன வீரர்களையும் நினைவுபடுத்துகிறது.

**அதியமான் கோட்டையில் இறந்துபோன தளபதியின் நினைவு கல்வெட்டு:**

அன்றைய சேலம் மாவட்டம் தருமபுரி பகுதியில் உள்ள அதியமான் கோட்டையில் தனது படை பரிவாரங்களுடன்

போர்ப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது உயிர் நீத்த தளபதி ஜான் வில்லியம் ரம்சேவும், அவரது குதிரையும் அங்கே இருக்கும் பணியர் மாளிகை (Traveller's Bungalow) எதிரே நல்லடக்கம் செய்யப்பட்டனர். இந்த தளபதியின் நினைவாக புனித ஜான்ஸ் தேவாலயத்தில் ஒரு பளிங்குக் கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது. (Sacred to the memory of John William Rumsey, late Captain of the 44th regiment Madras Native Infantry, who died at Adamancottah near Salem on the 21st march 1846,aged 40 years)

**மெருகூட்டப்பட்ட கருங்கற் பலகையின் பொறிப்பு :**

இந்திய புவியமைப்பியல் துறையைச் சேர்ந்த ஆய்வாளர் ஹென்றி ஜியோஹிகன் அரியலூரை அடுத்துள்ள சிற்றூரில் (Shillagoody) புவியமைப்பியல் ஆய்வின்போது வெய்யில் தாங்காமல் மரணமடைந்து அங்கேதானே அவர் அடக்கமானதைக் குறிக்கிறது இந்தப் பொறிப்பு.

**திருச்சிராப்பள்ளியின் பிரிட்டிஷ் கலெக்டர் மற்றும் நீதிபதி A.R.மெக்டோநெல் நினைவு பொறிப்பு:**

தேவாலய பலிபீட பகுதியில் அமைந்துள்ளது இந்த நினைவு வாசகம் (Sacred to the memory of Aeneas Ranald Mcdonell (1824-1867) of the Madras Civil Service for many years Collector and finally Judge of Trichinopoly )

**கடலில் அடக்கம் செய்யப்பட்ட தளபதியின் நினைவு வாசகம்:**


முதலாம் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போது துருக்கி கலிப்போலி தீபகர்ப்பத்தில் நடைபெற்ற கொடிய சண்டையில் (28-4-1915) பெற்ற காயங்களால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் தளபதி ரிச்சர்டு பிரியன் சூபிரிக் (Captain Richard Brian Shubrick); அவரது உடல் 29-4-1915 அன்று டார்டனெல்ஸ் ஜலசந்தி அடுத்த ஆழ்கடலில் அடக்கம் செய்யப்பட்டது (Sea Burial).

**திருச்சிராப்பள்ளி நினைவுகள்:**


தேவாலயத்தில் உள்ள பழமையான அடக்கம் 1815 ஆம் ஆண்டில் இறந்த 8 மாத பெண் குழந்தை பாலினா லூசிங்டன் (Paulina Lushington, Died 22-12-1815) இந்த கல்லறை கல் தேவாலய குருமார் உடுப்பு மாற்றும் அறையில் உள்ளது (This stone is in the Vestry).

**பிஷப் ஹீபர் கல்லறை:**

புனித யோவான் தேவாலய பலிபீடத்தின் வடக்கில் பிஷப் ஹீபர் ஐயரின் கல்லறை உள்ளது (His grave is within the sanctuary at thenorth of the Altar). பலிபிட சுவற்றில் பதிக்கப்பட்ட பளிங்கு கற்பலகையில் அவரின் நினைவு கல்வெட்டு வாசகம் உள்ளது. பேராயர் மிடில்டன் ஐயருக்கு அடுத்ததாக பதவி வகித்த இந்திய துணைக்கண்டம், தென்கிழக்கு ஆசியா மற்றும் கடல் கடந்த நாடுகளுக்குமான இரண்டாவது பேராயர் இவர். (Sacred to the memory of Reginald Heber, D.D.,Lord Bishop of Calcutta, Who was here suddenly called to his eternal rest during his visitation of the Southern provinces of his extensive Diocese on the 3rd day of April A.D. MDCCCXXVI (1826) and in the 3rd year of his episcopate.) இவர் பெயரில்தான் திருச்சிராப்பள்ளியில் உள்ளது புகழ்பெற்ற




திருச்சிராப்பள்ளியின் கலெக்டராகவும், நீதிபதியாகவும் இருந்த A.R. மெக்டோநெல், M.C.S., நினைவாக புனித ஜான்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் அலங்கார பளிங்கு கல் நினைவுச் சின்னம்.




1822 ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் மரணமடைந்த பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி இராணுவத்தின் பீரங்கிப் படையில் குண்டுபோடும் (Bombardier) பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் டேனியல் ஹட்சன் கல்லறை

பிஷப் ஹீபர் கல்லூரி. பிஷப் ஹீபர் எழுதிய கிறிஸ்து சபை பாமாலை (22) **'தூய தூய தூயா, சர்வ வல்ல நாதா, தேவரீர் கெந்நாளும் சங்கீதம் ஏறுமே'** என்ற பாடல் இசை மனதெங்கும் நிறைந்து பாடினேன் அங்கு நின்று.

12 ஆண்டுகளுக்கு முன்பு 2-5-2012 அன்று சேலம் CSI பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவரின் துணையோடு இந்த புனித ஜான்ஸ் தேவாலயத்தையும், அதனைச் சுற்றியும் அமைந்துள்ள கல்லறைகளையும் ஆய்வு செய்த அந்த நாளின் நினைவுகள் பசுமை மாறாமல் என் நெஞ்சில் நிலைத்திருக்கிறது. அன்று கண்ட காட்சிகளில் ஒன்றை மட்டும் இங்கே சொல்கிறேன். பழமையான கல்லறைகளின் மத்தியில் சமீப நாட்களில் மரித்துப்போன முக்கியஸ்தரான நம்மவர்களின் புதிய கல்லறைகள் இடைச் சொருகலாக காட்சியளித்தன. சில இடங்களில் பழைய கல்லறைகளை அகற்றிவிட்டு புதிதாக இறந்தவர்களை அடக்கம் செய்திருக்கும் வரலாற்று விரோதமும் கண்டேன்; சாட்சியான பழைய செங்கல் சுண்ணாம்பு காரை இடிபாடுகள் என்னை வேதனையடையச் செய்தது. இப்படி மெல்ல மெல்ல இவைகளெல்லாம் ஒவ்வொன்றாக அழிந்துபோகுமா? அதற்கு முன் இவைகளை யெல்லாம் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியது நமது வரலாற்றுக் கடமை.



கல்லறைத் தோட்டத்தில் உள்ள தென்பிராந்திய பிரிட்டீஷ் கிழக்கிந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியின் பிரமாண்ட கல்லறை

**வரலாற்றுச் சிறப்புமிக்க கல்லறைத் தோட்டம்:**

1. **பார்லோவின் கல்லறை:** இந்த கல்லறைத் தோட்டத்தின் பழமையான கல்லறை கல்வெட்டு அது. கிழக்கிந்திய கம்பெனி இராணுவத்தின் இளநிலை அதிகாரி எட்வர்ட் பார்லோ (Lieutenant Edward Barlow) 1817ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் நாள் மரித்ததைக் குறிக்கிறது.
2. **1940 ஆம் ஆண்டு மரித்த ஹாரி மெக்பார்லேன் கல்லறை:** சேலம் மாவட்டத்திலும் திருச்சிராப்பள்ளியிலும் புகழ்பெற்ற ஐரோப்பிய செல்வந்தர்களின் குடும்பத்தினர்.
3. **திரு.தாமஸ் ஜேம்ஸ் பிஸ்சர் கல்லறை:** சேலம் மாவட்டத்தில் ஏறத்தாழ 1,25,000 ஏக்கர் நிலப்பரப்பை சொந்தமாகக் கொண்ட ஒட்டுமொத்த சேலம் ஜமீனின் எஜமான் - இந்தியாவின் ஒரே ஐரோப்பிய ஜமீன்தார் ஜார்ஜ் பிரெட்ரிக் பிஸ்சர் துரையின் சகோதரரான திரு. தாமஸ் ஜேம்ஸ் பிஸ்சர் (Mr.Thomas James Fischer - died 7th January 1864) கல்லறை. இந்த கல்லறையில் எழுதப்பட்டுள்ள ஒரு வாசகம் 'The paths of Glory leads to the grave' நம்மை சிந்திக்க வைக்கிறது.
4. தென்மண்டல கிழக்கிந்திய கம்பெனி இராணுவப்படையின் தலைமைத் தளபதி மைக்கேல் ரிட்டெல் (Major general Michael Riddell, commanding Southern Division - died 3rd Nov.1844)
5. **கேப்டன் ஜோசப் லே குவே கல்லறை** (Captain Joseph Le Guay): பெங்களூரிலிருந்து திருச்சிராப்பள்ளியை நோக்கி ஒரு பெரும் காலாட்படையை (The Royal Regiment of foot) வழிநடத்திக் கொண்டு

வரும் வழியில் முசிறி என்ற இடத்தில் தங்கியிருக்கையில் (Camping at Missourey) நோய் தாக்கி/இறந்திருக்கிறார் (28-2-1829). இவரது உடலை சுமந்து வந்த வீரர்கள் திருச்சிராப்பள்ளி புனித ஜான்ஸ் தேவாலய கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்து கல்லறை எழுப்பினர்.

**முடிவுரை:**

இந்த கல்லறைத் தோட்டத்தை சுற்றிப் பார்த்த தென்கிழக்கு பிரிட்டீஷார் கல்லறை பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த திரு.ஹென்றி பிவுன்ரீக் கூறுகையில் இந்த கல்லறைத் தோட்டம் மிக முக்கியமான வரலாற்று இடம் என்றார். ஆங்கிலேய ஆட்சியின் திருச்சிராப்பள்ளி தென் பிராந்திய இராணுவ தலைமையின் அக்கால சாட்சியின் மிச்சங்கள் இங்கு உண்டு. வரலாற்று ஆர்வலர்கள் வந்து கூடும் ஒரு சரித்திரப் பூங்கா (Heritage Park), ஆங்கிலேய படை அமைப்பின் வரலாற்றைச் சொல்லும் ஒரு வரலாற்றுப் பெட்டகம். திருச்சிராப்பள்ளியின் ஆங்கிலேய ஆட்சிக்கால வரலாற்றின் ஒரு பகுதி இங்கே புனித ஜான்ஸ் தேவாலயத்திலும், அதனைச் சுற்றியுள்ள வரலாற்றுக் கல்லறைகளிலும் சாட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது.



தேவாலயத்தில் உள்ள அழகிய கண்ணாடி ஓவியம்






நெடுந்தொடர் -20

*வரலாற்று நாவல்*

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

**முனைவர் ஜான்சி பால்ராஜ்,**
திருநெல்வேலி



இந்தியாவின் எல்லா பக்கங்களில் இருந்தும் வந்து நிரம்பிய சின்னஞ்சிறு குழந்தைகளாலான சொர்க்கமாக காட்சியளித்தது அந்தக் காப்பகம். குழந்தைகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டிருக்க சமூகத்தால் கைவிடப்பட்ட பெண்களும் ஏமியிடம் தஞ்சம் புகுந்தனர். இவர்கள் குழந்தைகளை வளர்ப்பதில் பெரும் பங்காற்றியதோடு தங்களுக்கென்று மகிழ்ச்சியான வாழ்கையையும் வாழ்ந்தனர்.

டோனாவூரின் வடக்கு ஓரத்தில் தனித்து விடப்பட்ட அழகிய தீவு போல இருந்தது அக்காப்பகம். ஐரோப்பிய நாடுகளில் இந்த விசித்திர சமூகம் கனவுலகமாக அறியப்பட்டது. அதைக் குறித்து ஏமி எழுதிய நூல்கள் அங்கு பேசுபொருளானது. அதன் எதிரொலியாக ஏமியோடு அவரது பணிகளில் பங்கேற்க இளம் பெண்களும் ஆண்களும் தாங்கள் செய்துகொண்டிருந்த வேலைகளையும் விட்டுவிட்டு இந்தியாவுக்கு வர விண்ணப்பித்தனர். அவர்களுள் உண்மையான சேவை மனப்பான்மையுடையோரை மட்டுமே சோதித்தறிந்து வரவேற்றார் ஏமி.

காப்பகம் புதுப்புதுக் கட்டிடங்களால் பொலிவுப் பெற்றது. அவற்றின்

வடிவமைப்பு இந்திய ஐரோப்பிய கட்டிடக்கலையின் கலவையாகப் புதிய அமைப்பில் காண்போரை நின்று இரசிக்க வைத்தது. செங்கற்களால் கட்டப்பட்டு சிவப்பு கீழ் பூசப்பட்ட சுவற்றுடன் மேல்க் கூரை ஓடுகளால் மிக நேர்த்தியாக மூடப்பட்டிருந்ததன. கிட்டத்தட்ட எல்லா வீடுகளும் ஒரே அமைப்பில் கட்டப்பட்டன. எங்கும் பசுமை நிறைந்த மரஞ்செடி கொடிகளும் புல்வெளிகளும் பூந்தோட்டங்களும் அசைந்து கொண்டிருந்தன. அதற்குள் ஆங்காங்கே அமர்ந்து இளைப்பாறுவதற்கான நன்கு வடிவமைக்கப்பட்ட கல் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. இரவு நிலவொளியில் அமர்ந்து கதைப் பேசவும் ஆலோசிக்கவும் சிமெண்ட் இருக்கைகளும் வட்ட வடிவில் முன் மேசைகளும் அமைக்கப்பட்டிருந்தன. இது ஐரோப்பாவில் அதிநவீன பொழுதுபோக்கு இடங்களில் பயன்படுத்தப்பட்ட இருக்கை வசதிகளைப் போன்ற அமைப்பிலானது.

போக்குவரத்திற்கு வில்வண்டிகள், கூண்டுவண்டிகள், சக்கடாவண்டிகள் என்று தேவைகளுக்கேற்ப பயன்படுத்த மாட்டுவண்டிகள் அதற்கென்றே கட்டப்பட்ட நிற்பிடங்களில் ஆயத்தமாக நிறுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு வண்டிக்கும் திறமையான ஓட்டுனர்களும் உதவியாளர்களும் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டனர். வண்டிகள் செய்யும் ஆசாரிப் பட்டரைகளும் ஒரு மூலையில் இயங்கின.

பணகுடி, களக்காடு போன்ற அருகாமை கிராமங்களிலிருந்து கைத்தேர்ந்த ஆசாரிகள் இதற்கென்று நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். எண்ணை வித்துக்களை பிழிந்தெடுக்கும் செக்குகளும் மாவரைக்கும் நவீன இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தில் அப்போது வேறெங்கும் அத்தகைய இயந்திரங்கள் கிடையாது.

அங்குள்ளோர்களின் ஆடைகளுக்கென்று நெசவும் உள்ளேயே நடந்தது. நெசவுக் கூடம் அமைக்கப்பட்டு நெசவாளர்களுக்கு உள்ளேயே தங்கியிருக்க வீடும் அளிக்கப்பட்டிருந்தது. எப்போதும் தறியோடும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. தேவைக்கு அதிகமான துணிகள் ஏழை எளியோருக்கு இலவசமாகவும் மிகக் குறைந்தவிலையிலும் அளிக்கப்பட்டது. இதனால் சுற்று வட்டாரங்களில் சிறு குழந்தைகளும் ஆடைகள் அணிந்து நடமாடும் நாகரீகம் வளர ஆரம்பித்தது.

கட்டிடங்களுக்கு தேவையான செங்கல் சூளை, மரவேலைகளுக்கான ஆசாரிப் பட்டரை, அனைவருக்கும் சமையல் செய்வதற்கென்று ஒரே இடத்தில் சமையல் கூடம் என்று அனைத்து வசதிகளையுமுடைய சிறிய பட்டணம் போல உருவாகியிருந்தது அக்காப்பகம். எங்கும் எப்போதும் பறவைகளின் கீச்சிடும் ஒலிகளுக்கிடையே அதுவரை அங்கிருந்தோர் கண்டிராத புது உலகமாய் இரவும் பகலும் இயங்கி கொண்டிருந்தது.

1926 ஆம் ஆண்டு இவையனைத்தும் சட்டவரம்பிற்குள் பாதுகாக்கப்பட முறைப்படி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டது. அப்போது அதில் சுமார் 500 பேர் இருந்தனர். குழந்தைகள் படிப்பதற்கான பள்ளியிலும், பரம சுகசாலை என்ற பெயரில் கட்டப்பட்ட மருத்துவமனையிலும் பணி செய்வதற்காக ஐரோப்பாவின் பல நாடுகளிலுமிருந்து வந்த ஆண் பெண் செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்கள் என்று எங்கு பார்த்தாலும் அழகிய ஐரோப்பியர்களாலும் புதிய கலாச்சாரமும் இனம்புரியாத அன்பும் நிலவியது.

தமிழ்ப்பேச முயற்சிக்கும் ஆங்கிலேயர்களும் ஆங்கிலம் பேசவிளையும் தமிழர்களும் அதனால் ஏற்பட்ட புதிய மொழிக்கலவை. . . . என்று முற்றிலும் மாறுபட்ட ஆனால் முரண்பாடுகளில்லாத ஒற்றுமையுணர்வால் கட்டுண்டு மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டிருந்தது அந்த இடம். மக்களால் நட்சத்திரக் கூட்டத்தார் என்று பெயரிடப்பட்டிருந்த அந்த அமைப்பு இந்திய ஐரோப்பிய சேவகர்களால் எப்போதும் உயிர்த் தீபம் போல் மின்னிக் கொண்டிருந்தது. சுற்று வட்டாரமெங்கும் இருந்து வரும் ஏழை எளியோருக்கு இலவச மருத்துவம் அளிக்கப்பட்டது. சுகாதாரம் பற்றின விளிப்புணர்வு மக்களிடையே துளிர்த்தது. இதற்கிடையே ஏமியால் மீட்கப்பட்ட குழந்தைகள் இந்த இருபது ஆண்டுகளில் வாலிப வயதை எட்டியிருந்தனர். அவர்களும் அம்மருத்துவமனையில் செவிலியர்களாக பணியாற்றினர். அவர்களை மேலும் பயிற்றுவிக்க மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற ஐரோப்பியர்கள் இங்கு வந்தனர்.

அவர்களுள் இங்கிலாந்திலிருந்து வந்த டாக்டர் மரே என்பவரின் வருகை அம்மருத்துவமனையை மேலும் சிறப்புடையதாக்கியது. இவர் முதலில் சீனாவில் மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப்போரினால் தொடர்ந்து கொஞ்ச காலம் சொந்த நாட்டிற்கு சென்று திரும்பலாம் என்ற எண்ணத்தில் இலங்கைவழியாக இந்தியாவிற்கு வந்த இவர், ஏமி செய்யும் இப்பணிகளையும் கேள்விப்பட்டு 1927 ஆம் ஆண்டு டோனாவூருக்கு வந்து சேர்ந்தார். தொடர்ந்து குழந்தைகளின் மீது அவருக்கு ஏற்பட்ட அன்பினாலும் ஏமியின் இப்பணிகளுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற நோக்கிலும் இங்கேயே தங்கிவிட்டார்.

ஆனால் தான் முன்பு விட்டு வந்த அதே நாட்டிற்கு ஆறு மாதங்கள் கழித்து திரும்பவும் சென்றார். ஆனாலும் அங்கு அவரால் தொடர்ந்து செயலாற்ற முடியவில்லை. ஏமியின் மருத்துவமனையில் செயலாற்ற வேண்டும் என்ற ஆழ்மன எண்ணம் அவரை திரும்பவும் இந்தியாவை நோக்கி துரத்தியது. அப்போது சீனாவிலிருந்த சூழ்நிலைகளும் அவரது எண்ணங்களுக்கு ஒத்தூதின. ஆக, மொத்தமாக எல்லாவற்றையும் காலி செய்துவிட்டு டோனாவூர் காப்பகத்திற்கு வந்து சேர்ந்தார் டாக்டர் மரே. ஏமிக்கு பழம் நழுவி பாலில் விழுந்து பின் அதுவும் நழுவி தேனில் கரைந்ததைப் போல இருந்தது மரேயின் வருகை. என் குழந்தைகளுக்கு மருத்துவம் படித்த மருத்துவர் வேண்டும் என்ற அவரது நீண்ட கால தவத்தின் பதில் தான் இந்த டாக்டர் மரே என்பவர். . . .

மரே, நீ வந்து ஏழெட்டு மாதங்கள் ஆகிவிட்டன.

உன் பெற்றோரை பார்க்க நினைக்கலையா? மழை பெய்து கொண்டிருந்த அந்த அதிகாலை குளிரில் காப்பி டம்ளரை மரேயிடம் நீட்டியபடியே கேட்டார் ஏமி. ம். . . . நீ வந்தும் தான் முப்பது வருடங்கள் ஆகியாச்சே உனக்கு போக வேண்டுமென்று தோணலையா. . . ? என்றார் காப்பியை வாங்கியபடி புன்முறுவலோடு, மரே.

ம். . ஹூம். இது தான் எனது குடும்பம். இத்தனையும் என் குழந்தைகள் என்றவர் மற்றொரு டம்ளரில் ஏமிக்காக காப்பி கொண்டு வந்த சிந்தாமணி என்ற பெண்ணின் தலையை வருடியபடி. இவர்கள்தான் என் சொந்தங்கள் என்றார் மெல்லிய குரலில் ஆங்கிலத்தில். அந்தப் பெண் அப்பமுக்கற்று தன் வெள்ளையான எல்லா பற்களையும் காட்டி அழகாக சிரித்து விட்டு ஓடினாள். . . சிறு துள்ளலோடு. அந்த சிறுமியையே சற்று நேரம் பார்த்து விட்டு ஏமியைப் பார்த்தார் மரே. அவள் மகிழ்ச்சியோடு ஓடியதை தாய்மைப் பொங்க பார்த்து இரசித்துக்கொண்டிருந்தார் ஏமி. மரே. . . . இந்த சந்தோசம் எனக்கு வாழ்கையில் எல்லா நிறைவையும் தந்து வருகிறது. ஆனா ஒரே ஒரு கவலை தான். . . ஒரே ஒரு வேண்டுதல் தான் எனக்கு. . . என்றார் தூரத்தில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த அணில்களைப் பார்த்தவாறே.

அது என்னவென்று நான் தெரிஞ்சுக்கலாமா ஏமி?

ம். . . கண்டிப்பாக சொல்கிறேன் மரே. இந்தியா முழுவதிலும் இருக்கிற கோவில்களில் உண்மையாகவே இறைத்தொண்டு செய்துவரும் பெண்களும் இருக்கதான் செய்கிறார்கள். அவர்கள் அந்த கோயில்களுக்கு மிகவும் அவசியமானவர்களும் கூட. . ! நமது ஆலயங்களில் தங்களை அர்ப்பணித்து வாழும் கன்னியாஸ்திரிகளைப் போல தான் அவர்களும். ஆனால் ஆங்காங்கே நடக்கும் இது போன்று ஒரு சிலரின் பாலியல் இச்சைகளுக்காக தெய்வத்தின் பெயரை சொல்லி அர்த்தமற்ற கட்டுக்கதைகளை நம்ப வைத்து இந்தப் பிஞ்சு குழந்தைகளைப் பலியாக்கும் மோசடிகளை அரசு முழுமையாக தடை செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை நம்மால் முடிந்த அளவு செய்தாக வேண்டும். இங்கிலாந்து அரசும் அந்தந்த நாட்டு மத நம்பிக்கைகளில் தலையிடுவதை விரும்புவதில்லை. நான் எத்தனையோ முறை கடிதம் மூலம் இங்கு நடப்பவற்றை அரசுக்கு தெரிவித்து தான் வருகிறேன். ஆனால் அவர்களும் தலைமையை மீறி எதுவும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறார்கள். என்று வேதனை ததும்ப . . . கூறிக் கொண்டே இருந்தார் ஏமி.

மரே எந்தப் பதிலுமின்றி ஏமியின் அன்பையும் அறிவுத்திறனையும் தைரியத்தையும் மனதிற்குள் வியந்து கொண்டிருந்தார். சரிமா. . . நீ காப்பி சாப்பிடு. . குளிர்ந்து போயிடுச்சி பார். நான் மீண்டும் சூடாக்கி கொண்டு வந்து தருகிறேன் என்று மரே எழும்பினார். இல்லையில்லை வேண்டாம். . . உட்கார். என்று இருக்கையை காட்டினார் ஏமி.

ஏமி உன்னை நினைத்தால் எனக்கு ரொம்ப பெருமிதமாக இருக்கு. . . என்று ஏதோ சொல்ல வந்தவர் ஏமியின் கண்களை பார்த்தபடி எதுவும் சொல்லாமல் வெளியே தனது பார்வையை திருப்பினார். மழை வேகம் கொண்டு இறைந்து பெய்தது. . . வெளிச்சத்தை வரவிடாமல் மேகங்கள் ஆங்காங்கே அலைந்து கொண்டிருந்தன ஆகாய வெளியில். மிகவும் அழகான சீதோஷனம். . . இல்லையா மரே. . !?

ம். . . . ஆமாம். . . எனக்கும் பிடித்திருக்கு. சிறு சிறு சிட்டில் குருவிகள் வாசலில் அங்குமிங்கும் அலைந்து எதையோ கொத்திக் கொண்டிருந்தன. அய் அழகு. . . . என்றார் ஏமி.

ஏமி. . நீ தமிழ் பேசுவது ரொம்ப அழகு. எனக்கு தான் வரவே மாட்டேன் என்கிறது. நீ தான் எனக்கு கற்றுத்தர வேண்டும் என்றார் மரே.

தமிழ் என்றதும். . . ஏமி உவாக்கரை நினைத்தார். தமிழை கற்க நான்பட்ட பாடு கொஞ்சமல்ல மரே. உவாக்கருக்கு தான் நன்றி சொல்லனும். நீ ஆங்கிலத்தில் பேசுவதை குறைத்து என்னோடு தமிழில் பேச முயற்சிசெய். சீக்கிரம் பேசிவிடலாம்.

சரி அப்படியானால் ஒரு கண்டிசன். . . என்றார் மரே.

என்ன சொல்லு மரே. தினமும் எந்த வேலை இருந்தாலும் என்னோடு பேசுவதற்கென்று கொஞ்ச நேரத்தை நீ செலவிட வேண்டும் என்ற அவரது வார்த்தைகளில் இருந்த அன்பு ஏமிக்குள் ஊடுருவியதை மரே உணர்ந்திருக்கவில்லை.

ஏமி. . . நான் தமிழ் கற்றுக் கொள்வதற்காகதான் கேட்கிறேன், சிரியா. . . என்றார் கடைசி சொல்லை மட்டும் தமிழில்.

சிரி அல்ல மரே, அது சரி என்றதும் இருவரும் சத்தமிட்டு சிரித்தனர் . சரிசரி மரே, பிரேயருக்கு நேரமாகி விட்டது என்றதும் எழுந்து கொண்டனர் இருவரும். எத்தனை அழகான பெண் இவள். ஏன் இப்படி தனக்கென்று ஒரு குடும்பவாழ்வைப் பற்றி சற்றும் சிந்திக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்! எப்படி இதெல்லாம் முடிகிறது இவளால்? எப்போது பேசினாலும் அந்தக் குழந்தைகளைப் பற்றியே பேசிக் கொண்டு அதற்காகவே ஓடிக் கொண்டிருக்கும் இந்தப் பெண்ணிற்குள் இந்த தெய்வீக அன்பை இறைவன் வைத்தது எப்படி? மனதிற்குள் கேட்டுக் கொண்டே ஏமியோடு நடந்துகொண்டிருந்தார் மரே.

ஏய். . . மரே. . . என்ன காதில் விழ வில்லையா. . . என்று சற்று உரக்க எதையோ கூற, என்ன சொன்னாய். . நான் கவனிக்கவில்லை என்று விழித்தார் மரே. நான் பேசிய எதையும் கேட்கவே இல்லையா. . . ?

சாரி ஏமி.

என்ன சிந்தனையில் இருக்கிறாய் என்று மரேயை உற்றுப் பார்த்தார் ஏமி. எல்லாம் உன்னை நினைத்து தான் வேறென்ன என்றார் மரே. என்னைப் பற்றி இப்படி ஆழ்ந்து சிந்திக்க என்ன இருக்கிறது மரே. . . சொல்லு.

அது ஒன்னுமில்ல. . . வா. . .

ஆராதனைக்கு நேரமாகி விட்டது. . . குழந்தைகள் நமக்காக காத்திருப்பார்கள்.

மரே தான் மருத்துவமனைக்கு முழு பொறுப்பு, தலைமை மருத்துவர். அழகான தோற்றம், ஆறடி உயரம். அங்கிருந்த அனைவரும் அவரது உயரத்திற்கு கீழ்தான்.

இயற்கை ஆர்வலர், இயற்கை இரசிகன். நகைச்சுவை உணர்வு அதிகம். மரே இருக்கும் இடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். தன்னை அவர் ஒரு தலைமை மருத்துவராக ஒருநாளும் உணர்ந்திருப்பதாக தெரியாது. உடன் வேலைசெய்யும் உதவியாளர்வரை அனைவருமே அவரோடு நெருங்கி பழக அனுமதியளித்திருந்தார். இப்போது கொஞ்ச நாட்களாக மரே, எதற்கெடுத்தாலும் நர்சு ஓடா, ஓடா. . . என்று கூப்பிட்டு கொண்டே அலைகிறார் கவனித்தீங்களா ப்பிரண்ட்ஸ்? என்று நர்ஸ் ஜீவிதா கப்ரா சொல்ல எல்லோரும் சில வினாடிகள் யோசித்து கொல் என்று சிரித்தனர்.

ஆமா, ஆமா அந்த, ஓடா நேற்று சேலை கட்டியிருந்தாள் பார்த்தியா? இது வினவியா.

ஆங். . . ஆமா. . . மீண்டும் சிரிப்பு. மதிய சாப்பிட்டு வேளை அது. நர்சுகள் இரண்டு மூன்று பேர்களாக வந்து உணவரையில் அமர்ந்து சாப்பிடுவது வழக்கம். வட்டமான மர மேசை. எட்டுபேர் அமர்ந்து சாப்பிடும் அளவில் இருந்த அந்த மேசையில் நான்குபேர் அமர்ந்து அரட்டையோடு சாப்பிட ஆரம்பிக்கும் போது தான் டாக்டர் மரே, நர்சு ஓடா ஆகியோரின் கதை ஓடியது. ஓடா இங்கிலாந்தில் இருந்து வந்த மருத்துவம் கற்ற நர்சு. எப்போதும் புன்னகைப் பூக்கும் முகம். சிவப்பு ரோஜாப்பு கன்னங்கள். அதைவிட கனிந்த செரியின் உதடுகள். வேக வேகமாக நடக்கும் கால்கள். நீலக் கண்கள். . .

திடீரென்று அவர்களது சிரிப்பு சத்தம் நின்றது. ஏய். . அங்க பாரு ஓடா. . . . வர்ரா. சன்னல் வழியே தெரிந்தாள் ஓடா.

ம். . ஆமா . . . ஆமா

ஆமா. . அப்போ. . . இப்போ. . .

டாக்டர் மரேயும் வருவார் பாருங்க ப்ரன்ட்ஸ் என்று வினயா கூற, சத்தத்தை அடக்கி சிரித்தபடி உணவு பாத்திரங்களில் பார்வையை ஓட விட்டனர் எல்லோரும். ஓடா சில வினாடிகளில் தலையை கவிழ்ந்தபடியே அவர்களோடு வந்து அமர்ந்தாள். நிறையபேர் இருந்து சாப்பிட்டால் தான் நல்லா இருக்கு. . . நேற்று நான் வரும்போது யாருமில்ல நான் மட்டும் மாட்டிக்கிட்டேன். . . என்றபடி ஜீவிதா பேச்சை மாற்றினாள்.

ஓடா மென்மையாக சிரித்துக் கொண்டாலும் அவ்வப்போது கண்கள் சன்னல் பக்கம் சென்று மோதி மோதி திரும்பியது. எல்லோருக்கும் உணவுக்கான தட்டை கொண்டு வைத்தாள் உணவறை பொறுப்பாளர் தேவமரியா. இன்னொன்றையும் வச்சிட்டுப் போங்க மரியாக்கா. . . என்றாள் வினவியா.

எதுக்குமா என்னொன்று. . . ? என்றாள் மரியா.

அது வந்துக்கா. . . . இன்னும் யாராவது வரலாமில்லையா அதற்குதான் சொன்னேன் என்றதும் புரிந்தவர்களின் சத்தமான சிரிப்பு. ஓடாவுக்கும் மரியாவுக்கும் அந்தத் திடீர் சிரிப்பிற்கான அர்த்தம் புரியாமல் விழிக்க, கதவு திறக்கப்பட்டு மரே உள்ளே நுழைந்தார்.

பார்த்தீங்களா. . . நான் சொன்னேன்ல. . . . வினவியா மரேயை பார்த்தபடி எழ, அனைவரும் எழுந்து நின்றனர். ஓடாவுக்கு மட்டும் சற்று குழப்பம் , ஏதோ வெளித்தெரியாத உரை ஒன்று இங்கு நடப்பதை புரிந்து கொண்டாள். இருந்தாலும், மரேயின் வருகை ஓடாவை நெகிழ வைத்திருந்தது.

இந்தியப் பெண்களால் தங்கள் காதலை, வெட்கத்தை எளிதில் மறைத்து நடித்துவிட முடியும். ஆனால் வெள்ளைக்கார பெண்களுக்கு அது சாத்தியம் இல்லை. காதலை மறைப்பதில் ஓரளவு வெற்றி பெற்றாலும் அது உண்டாக்கும் நாணத்தை மறைப்பதில் தோற்றுதான் நிற்பர். இயல்பாகவே சிவந்திருக்கும் அவர்களது கன்னங்கள் மேலும் கனிந்து காட்டிக்கொடுத்துவிடும். இங்கும் அதே நிலைதான். மரே கைகளை கழுவி விட்டு நேராக வந்து ஓடாவின் அருகில் இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தார்.

இன்னும் யாரும் சாப்பிட ஆரம்பிக்கவே இல்லையா. ? என்றார் ஒருமுறை பார்வையை எல்லோர் மீதும் செலுத்திவிட்டு கடைசியாக ஓடாவின் மீது நிறுத்தியபடி. ஓடா தலையசைத்து புன்னகையையே அவருக்குப் பதிலாக்கினாள். சார். . . நீங்க அடுத்த வருடம் மேரேஜ்க்காக இங்கிலாந்து போக போறதா இங்கு பேசுறாங்களே உண்மையா? சீரியசாக கேட்பதை போல கேட்டாள் ஜீவிதா. இது மரேயின் மனமறியும் சோதனை வினா.


ம். . . ஆமா. . . அப்படிதான் நினைத்திருந்தேன். ஆனா இப்போ அப்படி அல்ல என்று சாப்பிட்டுக் கொண்டே சொன்னார் மரே. வேற எப்படி. . . . இந்தியப் பெண்ணை பார்க்கப் போறீங்களா என்று விடாமல் கேட்ட ஜீவிதாவால் சிரிக்காமலும் முடியாமல் அடக்க முயன்றாள்.

ஏன் இந்தியப் பெண்களை கட்டினால் தான் என்ன. ? அதில் சிரிப்பதறகு என்ன இருக்கிறது? என்ற மரேயின் எதிர்பாராத பதில் ஓடாவை வாட வைத்தது. ஓடாவின் நொடி நேர வாட்டத்தையும் மரேயால் தாங்கிக் கொள்ள முடியாமல். . . நான் ஓடாவை திருமணம் செய்ய அவளிடம் அனுமதி கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்றார் தடாலடியாக.

எல்லோரும் உணவு உள்தள்ளுதலை நிறுத்தி நிமிர்ந்து பார்க்க மரே மட்டும் தன் பார்வையால் ஓடாவை நிறுத்தி. . தொடர்ந்தார். ஓடா மரேயின் பதிலை இரசித்தபடி சிரித்துக் கொண்டே முற்றுப் புள்ளிவைத்தார். கேலிகளுக்கு. !



**தொடரும்.**



# கல்லிடைக்குறிச்சி திருச்சபையின் வரலாறு

ஜா. ஜான் ஞானராஜ்
கல்லிடைக்குறிச்சி

## அமைவிடம்

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தாலுகாவில் மேற்கு தொடர்ச்சி மலைக்கு அருகில் தாமிரபரணியின் தென்கரையில் கல்லிடைக்குறிச்சி உள்ளது. திருநெல்வேலியில் இருந்து மேற்கே 35 கிலோமீட்டர் தொலைவில் திருநெல்வேலி - பாபநாசம் நெடுஞ்சாலையில் கல்லிடைக்குறிச்சி அமைந்துள்ளது.

## அறிமுகம்

கல்லிடைக்குறிச்சி 6.56 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்புப் படி கல்லிடைக்குறிச்சியின் மக்கள்தொகை 26,398 ஆகும். 12,853 பேர் ஆண்கள், 13,545 பேர் பெண்கள் கல்லிடைக்குறிச்சியில் 7,364 வீடுகள் உள்ளன.

## கல்லிடைக்குறிச்சி – பெயர் காரணம்

கல்லிடைக்குறிச்சி மலைக் குன்றுகளுக்கு இடைப்பட்ட ஓர் குறிஞ்சி நில கிராமம். கல்+இடை+குறிச்சி என்பதே கல்லிடைக்குறிச்சி ஆனது. குறிஞ்சி நிலப் பகுதி கிராமங்கள் குறிச்சி என்ற பெயருடன் நிறைவு பெறும்.

## கல்லிடைக்குறிச்சியின் பிறபெயர்கள்

கல்லிடைக்குறிச்சியில் உள்ள ஏராளமான கல்வெட்டுகளை ஆய்வு செய்கையில் பழங்காலத்தில் இக்கிராமம் இராஜராஜ சதுர்வேதிமங்கலம், கரந்தையார்பாளையம், திருக்கரந்தை, மதில்குறிச்சி, சத்திரியசிகாமணிபுரம் கோவிந்தபாடி,

சிலாசாலிபுரம், கல்குறிச்சி, கல்லடைகுறிச்சி சேரமானார், சேரகுமாரன், கல்யாணபுரி, இராயசிகாமணி, முள்ளிநாட்டு நல்லூர் என்பது உட்பட 27 பெயர்களில் கல்லிடைக்குறிச்சி அழைக்கப்பட்டுள்ளது.

## சங்ககாலத்து கிராமம்

ஆரியர் வருகைக்கு முன்பாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இக்கிராமம் வேட்டைக் கிராமமாக இருந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சங்ககாலத்தில் ஆய் அண்டிரன் என்ற குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இக்கிராமம் இருந்துள்ளது.

## கல்லிடைக்குறிச்சி – கிராம சிறப்புகள்

இவ்வூர் தாமிரபரணி ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் மேற்கு எல்லையில் தாமிரபரணி மற்றும் மணிமுத்தாறு ஆகிய இரு நதிகள் இணைகின்றன. இந்த இடத்தில் தாமிரபரணி பாசனத்தின் முதல் பழமையான அணைக்கட்டான கன்னடியன் அணைக்கட்டு 13 - 14 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளது. அந்த இடத்தில் இருந்து கன்னடியன் கால்வாய் தொடங்குகிறது. தாமிரபரணி ஆற்றின் புதிய பாசன திட்டமான வெள்ள நீர் கால்வாய் அணைக்கட்டு கல்லிடைக்குறிச்சியின் கிழக்கு எல்லையில் கோரையாறு கன்னடியன் கால்வாயில் இணைகிற இடத்தில் கட்டப்பட்டுள்ளது. கல்லிடைக்குறிச்சி அப்பளம் மற்றும் வடகம் உலகப் புகழ் பெற்றது. உலகம் எங்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## தலைமையிடமாக கல்லிடைகுறிச்சி

14 மற்றும் 15 ஆம் நூற்றாண்டுகளில் வெள்ளை நாடான் ஆட்சியாளர்களின் தலைமையிடமாக கல்லிடைக்குறிச்சி இருந்துள்ளது. இவர்களது காலத்தில் கி.பி.1380, கி.பி.1386, கி.பி.1453 ஆகிய வெவ்வேறு காலகட்டங்களில் ஒரே கல்லில் வெட்டப்பட்ட அக்கால அரசியல் செய்திகளை கூறுகிற வெள்ளை நாடான் கல்வெட்டு கல்லிடைக்குறிச்சி ஆறாம் எண் சாலையில் உள்ளது. வெள்ளை நாடான் ஆட்சியாளர்களுக்குப் பின்னர் சேர அரசர்களின் துணை தலைமையிடமாக இவ்வூர் இருந்துள்ளது. இவ்வூரில் தங்கி இருந்து அரசு ஆணைகளையும் இவர்கள் பிறப்பித்துள்ளனர். இவை அனைத்தையும் குறித்து இங்குள்ள கல்வெட்டுச் செய்திகள் மூலம் அறிகிறோம்.

## சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய நகரம்

மேல் நெல்லைப் பகுதியில் சுதந்திர போராட்டத்திற்கு தலைமை தாங்கிய நகரம் கல்லிடைக்குறிச்சி. யக்ஞேஸ்வர சர்மா, கோமதி சங்கர தீட்சிதர், T.C.சங்கர் ஐயர், லட்சுமி சங்கர் ஐயர்,T.R.மகாதேவ ஐயர் எனப் பல சுதந்திர போராட்ட தியாகிகளை இக்கிராமம் தந்துள்ளது.

## கல்லிடைக்குறிச்சியில் கிறிஸ்தவம்

முதன்முதலாக கல்லிடைக்குறிச்சிக்கு கிறிஸ்தவத்தை அறிமுகம் செய்தவர்கள் இலங்கையிலிருந்து மீன் மற்றும் கருவாடு வியாபாரத்துக்காக 16 ஆம் நூற்றாண்டில் கல்லிடைக்குறிச்சியில் குடியேறிய தமிழ் கத்தோலிக்க கிறிஸ்தவ மீனவர்கள் ஆவர். வெள்ளை நாடான் ஆட்சியாளர்களின் கோட்டை இருந்த கல்லிடைக்குறிச்சியின் கிழக்குப் பகுதியில் இவர்களால் பனை ஓலையை மேற்கூரையாகக் கொண்ட தூய அந்தோணியார் பெயராலான தேவாலயமும் கட்டப்பட்டிருந்தது.

## தூய.சவேரியாரின் கல்லிடைக்குறிச்சி வருகை

கொச்சி அம்பலக்காட்டிலிருந்து தூத்துக்குடி நோக்கி தூய சவேரியார் கால்நடையாகப் பயணம் செய்தபோது கல்லிடைக்குறிச்சி தூய அந்தோணியார் தேவாலயத்தில் அவர் ஜெபித்து சென்றார் என்பது மரபுவழி செவி வழிச் செய்தியாகும். பிற்காலத்தில் மீனவர்கள் இடப்பெயர்ச்சி செய்து வெளியேறினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓலைக் கூரை அமைக்கப்பட்ட தூய அந்தோணியார் தேவாலயம் மட்டுமே கல்லிடைக்குறிச்சியில் இருந்து வந்தது. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வீரவநல்லூர் கிளாக்குளம் சைவ வேளாளர்-சைவசெட்டியார் சமூக கிறிஸ்தவரான பெரிய ஆச்சி என்று அழைக்கப்படும் மரியவியாகம்மாள் அவரது மூன்று பெண் குழந்தைகள், இரண்டு ஆண் குழந்தைகள், மருமக்கள்மார் பேரப்பிள்ளைகள் என குடும்பமாக கல்லிடைக்குறிச்சியில் குடியேறினார்கள். அவர்கள் தேவாலயத்தில் வழிபாடு செய்து பராமரித்தனர். அந்தப் பழமையான தேவாலயம் 1989 இல் முற்றிலும் அப்புறப்படுத்தப்பட்டது.

புதிய தேவாலயம் 03.09.1991 அன்று மகாகனம். இருதயராஜ் ஆண்டகை அவர்களால் மங்கலப்படைப்பு செய்யப்பட்டது. இந்த தேவாலயம் விரிவாக்கம் செய்யப்பட்டு 12.01.2010 இல் மறுமங்கல படைப்பு செய்யப்பட்டது. தேவாலய வளாகத்திற்கு அருகில் JMJ துறவற சபை கன்னியர் இல்லம் உள்ளது. இவர்கள் கல்லிடைக்குறிச்சியில் தூய அந்தோனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியை நடத்தி வருகிறார்கள். இன்று சுமார் 100 கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பத்தினர் கல்லிடைக்குறிச்சியில் உள்ளனர்.

## மேற்கு நெல்லையில் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவம்

1820 ஆம் ஆண்டு முதல் அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டமெங்கும் கனம். ரேனியஸால் நற்செய்தி அறிவிக்கப்பட்டு வந்தது. 1828 இல் கனம். ரேனியஸின் நற்செய்திப் பணியால் கல்லிடைகுறிச்சி, கடையம், சீவலசமுத்திரம், கருத்தப்பிள்ளையூர், கல்யாணிபுரம் போன்ற மேற்கு நெல்லையின் கிராமங்கள் கிறிஸ்தவத்தை ஏற்றன. அவற்றில் பதினெட்டு பிராமண தெருக்களைக் (அக்ரஹாரம்) கொண்ட பழம்பெரும் கிராமம் கல்லிடைக்குறிச்சி.

## சோழர்கள் ஆட்சிக் காலத்தில் கல்லிடைக்குறிச்சி

11 ஆம் நூற்றாண்டில் கல்லிடைக்குறிச்சி சோழ மன்னர்களால் ஆளப்பட்டது. இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் ஆகியோரால் தஞ்சாவூர் கும்பகோணம் பகுதியைச் சார்ந்த சைவ பிராமணர்கள் பெருங்குழுவாக கல்லிடைக்குறிச்சியில் ஏற்கனவே இருந்த ஆதிவராகப் பெருமாள் கோவிலைச் சுற்றிலும் குடியேற்றப்பட்டனர். அவர்களால் கல்லிடைக்குறிச்சி மெயின் ரோட்டின் மேற்கு பகுதியில் பத்து அக்ரஹாரத் தெருக்கள்

உருவானது.

### நாயக்கர் ஆட்சியில் கல்லிடைக்குறிச்சியும் அரியநாத முதலியாரும்

16 ஆம் நூற்றாண்டில் கல்லிடைக்குறிச்சியில் தங்கி நாயக்கர் ஆட்சிப் பணிகளை தளவாய் அரியநாத முதலியார் கவனித்து வந்தார். அவரது காலத்தில் கல்லிடைக்குறிச்சி மெயின் ரோட்டின் கிழக்குப் பகுதியில் எட்டு அக்ரஹாரத் தெருக்கள் உருவானது.

### கல்லிடைக்குறிச்சி திண்ணை பள்ளிக்கூடங்களும் சாதி வேற்றுமையும்

கல்லிடைக்குறிச்சியில் நடைபெற்றுவந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பிராமணர், வேளாளர் மட்டுமே கல்வி பயில வாய்ப்பு அளிக்கப்பட்டு வந்தது. சாதி ஆதிக்கம் இங்கு மிகுந்து காணப்பட்டது. பிற சாதியினர் கல்வி பயில வாய்ப்பின்றி தவித்துக் கொண்டிருந்தனர்.

### ரேனியஸின் வருகையும் சபை மற்றும் சமத்துவப்பள்ளி உருவாகுதலும்

1828 இல் கனம் ரேனியஸின் நற்செய்திப் பணியால் கல்லிடைக்குறிச்சியில் வயதான பொன்னாசாரி திருமுழுக்கு பெற்றார். கல்லிடைக்குறிச்சிசபை உருவானது. பொன்னாசாரியின் வேண்டுகோளை ஏற்று கல்லிடைக்குறிச்சியில் முதன்முதலாக அனைத்து சாதியினரும் கல்வி பயிலும் வண்ணம் 1829 இல் CMS பள்ளிக்கூடம் கனம். ரேனியசால் தொடங்கப்பட்டது.

### கல்லிடைக்குறிச்சி சபையின் வேகமான வளர்ச்சியும் பின்னடைவும்

கனம்.ரேனியஸ் ஐயரவர்களின் தொடர் ஊழியத்தாலும் பொன்னாசாரியின் தொடர் முயற்சியாலும் சபை வளர்ச்சியைப் பெற்றது. பொன்னாசாரி குடும்பம், ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவக் குடும்பம், இந்து சன்னியாசி குடும்பம், பத்து நெசவாளர் குடும்பங்கள் பொன்னாசாரியின் மைத்துனர் குடும்பம் ஆக 14 குடும்பத்தினர் கிறிஸ்தவர் ஆயினர். கல்லிடைக்குறிச்சியில் இஸ்லாமியர், செங்குந்தர், இல்லத்தார் ஆகிய மூன்று சமூகத்தினர் நெசவு பணியைச் செய்தனர். இவர்கள் நெய்த துணிகளை கல்லிடைக்குறிச்சி கரந்தையார்பாளையம் பிராமண கூட்டமைப்பு வாங்கி தமிழ் நாட்டின் பிற பகுதிகளுக்கும் அக்காலத்து கொச்சி திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் சென்று விற்பனை செய்தனர். கிறிஸ்தவ இல்லத்தார் நெசவாளர் நெய்த துணிகளை அவர்கள் வாங்க மறுத்ததால் கிறிஸ்தவர்கள் வறுமை நிலையை அடைந்தனர். அவர்கள் கல்லிடைக்குறிச்சியை விட்டு வெளியேறினர். சபை ஐந்து குடும்பங்களைக் கொண்டதாக மாறியது. இந்த சூழ்நிலையில் 1835 இல் கனம். ரேனியஸ் CMS மிஷனை விட்டு நீக்கப்பட்டதால் சபையார் மிகுந்த வருத்தமடைந்தனர். கனம்.பெற்றிட் காலத்தில் சபை மூன்று குடும்பங்களைக் கொண்டதாக குறைந்தது.

கல்லிடைக்குறிச்சி சபையை புதுப்பித்த கனம். ரேனியசின் மகன் கனம்.சார்லஸ் ரேனியஸ் 1835 க்குப் பின் 3 கிறிஸ்தவ குடும்பங்களும் படிப்படியாக பின்வாங்கினர். 1849 -1850 இல் கனம். சார்லஸ் ரேனியஸ் டோனாவூர் தலைமை மிஷனரியாக பொறுப்பேற்றார். தெற்கே பேர்ப்பிலான்குளம் முதல் வடக்கே கல்லிடைக்குறிச்சி வரை டோனாவூர் வட்டார CMS. மிஷன் எல்கையாக இருந்தது.

தந்தை ரேனியஸைப் போன்று ஊழிய ஆர்வம் கொண்ட கனம். சார்லஸ் ரேனியஸ் டோனாவூர் உபதேசிமார்களோடு இணைந்து கல்லிடைக்குறிச்சியில் நற்செய்திப்பணி செய்தார். கல்லிடைக்குறிச்சி மேல் முகம் நாடார் தெருவில் முதன்முதலாக தேரிச்சாமியையும் பலவேசம் சேர்வைக்காரர் என்ற படை திரட்டி சேர்வைக்காரரையும் குலதெய்வமாக வழிபட்டு வந்த மா. இசக்கிமுத்து நாடார் - வடிவு தம்பதியரின் மகன் அய்யம்பெருமாள் தாம் வழிபட்ட குலதெய்வத்தை விட்டு விட்டு இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்று சுவிசேஷமுத்து என்ற அடையாளப் பெயரில் 1850 இல் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர் ஆனார். இவருக்கு டோனாவூர் மிஷனரிகளின் ஏற்பாட்டில் டோனாவூருக்கு அருகில் உள்ள நல்லமரம் கிராமத்தைச் சேர்ந்த காலேப் நாடாரின் மகள் சூசன்னாளுடன் திருமணம் நடைபெற்றது. கல்லிடைக்குறிச்சி சபை புதுப்பிக்கப்பட்டது.

### தொடக்க கால கல்லிடைக்குறிச்சி சபை

யோவான் உபதேசியார் கல்லிடைக்குறிச்சிக்கு சபை ஊழியராக 1850 இல் நியமிக்கப்பட்டார். 1862 வரை பணி செய்தார். சுவிசேஷமுத்து அய்யம்பெருமாளின் தாயார் வடிவு ஞான வடிவு என்ற பெயரிலும், தம்பி மாணிக்கமுத்து என்ற பெயரிலும் தங்கை பூரணம் என்ற பெயரிலும் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர் ஆயினர். சுவிசேஷமுத்து அய்யம்பெருமாளின் சித்தப்பா மகள் மாணிக்கமுத்துவைத் திருமணம் செய்திருந்த எமன் சாமியை குலதெய்வமாக வழிபட்டு வந்த ஏமுடையானும் அவரது மனைவியும் ஏசுதாசன் - மாணிக்கமுத்து என்ற பெயர்களில் ஞானஸ்நானம் பெற்றனர்.

அருமைநாயகமும் அவரது மனைவியும் அருமைநாயகம் - மரியாள் என்ற பெயர்களில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். மோசே உபதேசியார் - அன்னாள் தம்பதியர் 1862 முதல் 1873 வரை கல்லிடைக்குறிச்சியில் தங்கி சபை ஊழியராகவும் மிஷன் பள்ளிக்கூட ஆசிரியர்களாகவும் பணி செய்தனர். இவர் காலத்தில் பத்து குடும்பங்களாக சபை உயர்ந்தது.

### ஈசாக்கு உபதேசியாரின் தியாகமிக்க ஊழியம்

1873 இல் மருதகுளம் வட்டாரத்தை சேர்ந்த A.ஈசாக்கு உபதேசியார் கல்லிடைக்குறிச்சிக்கு சபை ஊழியராக வந்தார் அவர் புதுப்பிக்கப்பட்ட கல்லிடைக்குறிச்சி சபையின் முதல் கிறிஸ்தவரான சுவிசேஷமுத்து அய்யம்பெருமாளின் மூத்தமகள் ஞான வடிவுவை திருமணம் செய்திருந்தார். இருவரும் பள்ளி ஆசிரியர்களாக கல்லிடைக்குறிச்சியில் தங்கி பணி செய்தனர். இவரது பணிக்காலத்தில் சபை அதி வேகமாக வளர்ந்தது. 1903 வரை 30 ஆண்டுகாலமாக A. ஈசாக்கு உபதேசியார் செய்த ஊழியத்தின் பயனாக சபை குடும்பங்களின் எண்ணிக்கை 4 மடங்கு உயர்ந்து 40 ஆனது.

ஈசாக்கு உபதேசியார் காலத்தில் சபை ஊழியர் தங்கி வசிக்க மிஷன் வீடு சபையில் இல்லை. அவர் தமது சொந்த வீட்டில் தங்கி இருந்து சபைப்பணி செய்தார். ஈசாக்கு உபதேசியார் பக்கவாத ஜன்னி நோய் காரணமாக தமது 69 ஆம் வயதில் 27.02.1903 இல் மரணம் அடைந்தார். அவரது உடல் செட்டியார் குளத்திற்கு நீர் வரும் ஓடைக்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## கல்லிடைக்குறிச்சி சபை வளர்ச்சியில் கார் மிஷனரி அவர்களின் பங்களிப்பு

1897 முதல் 1915 வரை திருநெல்வேலி மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவர் மற்றும் சி.எம்.எஸ் தலைமை கண்காணிப்பு மிஷனரி எனும் உயர் பொறுப்பில் இருந்து ஏராளமான சபைகளை உருவாக்கி ஏராளமான சபைகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் சொந்த நிலங்களை வாங்கி திருநெல்வேலி திருமண்டல வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர் கார் மிஷனரி. இவர் கல்லிடைக்குறிச்சி திருச்சபையை அதிகமாக நேசித்து அடிக்கடி வந்து சபையாரை சந்தித்து சபையாரின் தேவைகளை சிறப்பாக நிறைவேற்றினபடியினால் **கல்லிடைக்குறிச்சி திருச்சபையின் தந்தை** என அழைக்கப்படுகிறார். அக்காலத்தில் கல்லிடைக்குறிச்சி மேல்முகம் நாடார் தெருவின் மத்தியில் CMS மிஷனுக்கு சொந்தமானதாக கிழ மேலாக கிழக்கு நோக்கி வாசல் கொண்டதாக இரு பனை மரங்களை தூண்களாகக் கொண்ட கூரை கட்டிடமே இருந்தது. அது தேவாலயமாகவும் பள்ளியாகவும் செயல்பட்டது. அந்தக் கட்டிடத்தை பள்ளியாக மட்டுமே வைப்பது, தேவாலயத்தை தனியே பெரிதானதொரு இடத்தில் கட்டுவது என திட்டமிட்ட கார் மிஷனரி கல்லிடைக்குறிச்சி சபையைச் சார்ந்த திரு.P. மனோன்மணி நாடாரிடமிருந்து சிங்கம்பட்டி சாலையை ஒட்டி இருந்த 42 சென்ட் நிலத்தை 100 ரூபாய்க்கு வாங்கி கிரைய பத்திரத்தை 04.04.1904 இல் பதிவு செய்தார். அந்த புதிய இடத்தில் தென் வடலாக வடக்கு நோக்கி வாசல் கொண்டதாக தேவாலயம் கட்டுவதற்கு நெல்லை பேராயர் A.A.வில்லியம்ஸ் அவர்களால் 1906 இல் அடிக்கல் நாட்டச் செய்தார். தமது மேற்பார்வையில் 50 × 33 × 30 அடி நீள அகல உயரத்தில் பிரமாண்டமாக கட்டப்பட்ட தேவாலயத்தின் தூண்கள் பலமுறை சரிந்து விழுந்ததைக் கண்ட கார் மிஷனரி ரயில்வே உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களது தொழில் நுட்ப ஆலோசனையுடன் ரயில்வே கர்டர்கள் துணையுடன் தூண்களை நிலை நிறுத்தினார். தேவாலய பணியை சிறப்பாக கட்டி முடித்தார். தேவாலயத்தை ஒட்டி மேல்புறம் இருந்த வைராவிகுளம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட 18 சென்ட் நிலம் உரிய முறையில் தேவாலயத்திற்கு கிடைக்க ஏற்பாடு செய்தார். 01.03.1910 செவ்வாய் அன்று கனம்.E.S. கார் மிஷனரி முன்னிலையில் நெல்லை & மதுரை பேராயர் மகாகனம். A.A. வில்லியம்ஸ் அவர்களால் தேவாலய பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்நேரம் பேராயர் அவர்களுடன் அம்பாசமுத்திரம் தாலுகா உயர் அலுவலர் ஹண்டர், ரயில்வே உயர் அலுவலர் மன்றோ ஆகியோரும் உடன் வந்தார்கள். கல்லறைத் தோட்டம் இல்லாமல் சபையார் பொத்தையடி, ஓடையின் கரைப்பகுதி ஆற்றங்கரை, சொந்த பட்டா நிலம் என பல இடங்களில் அடக்கம் செய்து வந்த நிலையில் அப்போதைய அம்பாசமுத்திரம் தாசில்தார் திரு.அன்புடையானிடம் பேசி கல்லறைத் தோட்டம் கிடைக்கும்படி 1910 இல் ஏற்பாடு செய்தார்.

## 1903 முதல் 1950 வரையிலான சபை வளர்ச்சி

இக்காலகட்டத்தில் ஈசாக்கு உபதேசியாருக்கு பின் G.விசுவாசம் S.ஞானசிகாமணி A.குருபாதம் M.மனோன்மணி D.S.பொன்னையா P.ஜேக்கப். D.S.பொன்னையா J.D.தேவதாசன் , K.அருமை நாயகம் D.S.பொன்னையா, Y.D. ரசல், V.காலேப் யோசுவா ஆகிய உபதேசிமார்கள் கல்லிடைக்குறிச்சியில் சபை ஊழியராகப் பணி செய்தனர். இவர்களில் K.அருமை நாயகம் சபை ஊழியராக இருந்தபோது பள்ளி வளாகத்தில் சபை ஊழியர் தங்கி பணி செய்வதற்கான மிஷன் வீடு கட்டப்பட்டது.

## 1950 – 1976 வரையிலான சபை வளர்ச்சி

1950-1960 வரை சபை ஊழியராகப் பணி செய்த திரு.விக்டர் சதானந்தர் காலத்தில் தேவாலய பொன்விழா கொண்டாடப்பட்டது. 01.03.1910 அன்று பேராயருக்கு முக்கிய அலுவல் இருந்ததால் பொன்விழா ஆராதனை 10.03.1960 அன்று பேராயரால் நடத்தப்பட்டது. அன்றைய தினம் பேராயர் தலைமையில் கல்லிடைக்குறிச்சி தேரடி பகுதியில் திருமண்டல சுவிசேஷ ஊழியம் நடைபெற்றது.

1960 - 1963 வரை பணிசெய்த நவமணி உபதேசியார் காலத்தில் கிறிஸ்துமஸ் கீத வாழ்த்து பவனி சிறப்பாக நடைபெற்றது. அவருக்குப் பின் 1963-64 இல் ஞானப்பிரகாசம் உபதேசியார் பணி செய்தார்கள். 1964 -1974 வரை சபை ஊழியர் ஆக பணி செய்த விக்டர் தாமஸ் உபதேசியார் காலத்தில் தேவாலய காம்பண்டு சுற்றுக்சுவர் கட்டப்பட்டது. தேவாலயம் ஒலிபெருக்கி வசதியை பெற்றது, முன் மண்டபத்தில் வெண்கல நாக்குமணி பொருத்தப்பட்டது. தேவாலயத்தில் VBS 1970 இல் தொடங்கப்பட்டது. இவர்களுக்குப் பின் 1974 - 1976 இல் சாமுவேல் தேவராஜ் உபதேசியார் சபை ஊழியராக இருந்தார்கள் அவர்களது காலத்தில் மிஷன் வீடு முழுவதுமாக பழுது பார்க்கப்பட்டது.

## 1976 முதல் 2009 வரையிலான சபை வளர்ச்சி

1976 -1983 வரை திரு செல்லத்துரை உபதேசியார் சபை ஊழியராக இருந்தார்கள். அந்நேரம் 17.12.1977 இல் திரு. S.விக்டர் சாலமோனை தலைவராகக் கொண்டு பாடகர் குழு அமைக்கப்பட்டது. தேவாலய கோபுரம் சேகர தலைவர் கனம்.-J.B.படரிக், சபை ஊழியர் திரு.S.செல்லத்துரை முன்னிலையில் 23.12.1980 இல் நெல்லை பேராயர் மகாகனம்.S. தானியல் ஆபிரகாம் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அக்காலத்தில் கிறிஸ்மஸ் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.

1983 முதல் 1991 வரை சபை ஊழியராகப் பணி செய்த சீனிப்பாண்டியன் உபதேசியாரின் காலத்தில் கல்லறை தோட்டத்தில் கீழ் பகுதியில் இருந்த பெரிதான நிலம் ஊர் வரி மூலம் வாங்கப்பட்டது கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினரும் இதற்கு உதவி செய்தனர். இக்காலத்தில் தேவாலய பவள

விழா கொண்டாடப்பட்டது. பவள விழா நினைவாக தேவாலய தரைத்தளம் மொசைக்தளம் ஆக்கப்பட்டு நெல்லை பேராயர் ஜேசன் தர்மராஜ் அவர்களால் 03.04.1985 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. அன்றைய தினம் திடப்படுத்தல் ஆராதனையும் நடைபெற்றது.

1991 முதல் 2008 வரை திரு.A.S. சாமுவேல் சபை ஊழியராக பணி செய்தார்கள். அவர்களது பணி காலத்தில் திரு.J.தேவாசீர்வாதம் உபதேசியார் நூற்றாண்டை முன்னிட்டு அவர்களது மூன்று மகன்களால் தேவாலய வளாகத்தில் 40,000 ரூபாய் செலவில் 19 × 16 × 9 அடி நீள அகல உயரத்தில் கட்டப்பட்ட மண்டப மேடை 24.07.1994 அன்று தென்கிழக்கு கவுன்சில் சேர்மன் கனம்.D.ஜான் டேவிட், சேகர தலைவர் நெல்சன் ஜெபத்துரை சபை ஊழியர் திரு.A.S. சாமுவேல் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம். ஜேசன் S.தர்மராஜ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்த மண்டப மேடை நீள அகலத்தில் குறைவாக இருப்பதாகவும் பெரிதாக கட்டித் தரும்படியும் 2018 இல் சேகர கமிட்டி தேவாசீர்வாதம் குடும்பத்தாரைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அதே குடும்பத்தாரால் இந்த மண்டபமேடை முழுவதுமாக அப்புறப்படுத்தப்பட்டு அதே இடத்தில் J.தேவாசீர்வாதம் உபதேசியாரின் 125 ஆவது ஆண்டு ஜூபிலியை முன்னிட்டு 25 × 20 × 13 அடி நீள அகல உயரத்தில் ஐந்து இலட்சம் செலவில் பெரிதாகக் கட்டப்பட்டது. அந்த புதிய மண்டப மேடை சேகர தலைவர் கனம்.ஜான் கிப்சன், சபை ஊழியர் திரு.ஏசாயா இரத்தினவேல் பாண்டியன் முன்னிலையில் தென்மேற்கு கவுன்சில் சேர்மன் கனம்.J.P.M.வசந்தகுமார் ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

50 × 33 அடி நீள அகலம் கொண்ட தேவாலயத்தை பின்புறம் 40 அடி விரிவாக்கம் செய்ய 2002 இல் தீர்மானிக்கப்பட்டு விரிவாக்க பணிகள் தொடங்கியது இப்பணிக்கு திரு.S. காலேப் பால்ராஜ் மற்றும் திரு.T.ஜெயராஜ் ஆகியோர் பொருளாளர்களாக செயல்பட்டனர். ஏழு இலட்சம் செலவில் விரிவாக்கப்பட்ட தேவாலயம் 01.03.2004 அன்று சேகர தலைவர் J.P.D.சுவாமிதாஸ், சபை ஊழியர் திரு.A.S. சாமுவேல் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம்.S. ஜெயபால் டேவிட் அவர்களால் மறுபிரதிஷ்டை செய்யப்பட்டது. கல்லிடைக்குறிச்சி புதிய சேகரமாக 01.04.2006 முதல் செயல்பட தொடங்கியது. முதல் சேகர தலைவராக கனம். வில்சன் சாலமோன்ராஜ் பொறுப்பேற்றார்கள். கல்லிடைக்குறிச்சி கிறிஸ்து தேவாலய குருமனை 29.04.2007 அன்று சேகர தலைவர் கனம்.சாமுவேல் துரைராஜ், சபை ஊழியர்கள் திரு.இரவி மோகன்ராஜ் திரு.A.S.சாமுவேல் நெல்லை பேராயர் மகாகனம்.S.ஜெயபால் டேவிட் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2007 இல் கனம். ஆபிரகாம் செல்வராஜ் ஐயரவர்கள் சேகர தலைவராக பொறுப்பேற்றார்கள். அவர்களது பணிக் காலத்தில் 2008 முதல் 2009 வரை திரு.M.K. ஐசக் ராஜரத்தினம் சபை ஊழியராகப் பணி செய்தார்கள். இருவரது முன்னிலையில் J.தேவாசீர்வாதம் உபதேசியார் நூற்றாண்டு மண்டப மேடையின் மேல்புறம் இரண்டு இலட்சம் ரூபாய் சேகர நிதியில் கட்டப்பட்ட ரேனியஸ் மண்டபம் 01.01.2009 அன்று மேல்நிலை கல்வி நிலைவர குழு செயலாளர் திரு வேதநாயகம் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவாசீர்வாதம் உபதேசியார் நூற்றாண்டு நினைவாக கட்டப்பட்ட மண்டப மேடையின் கீழ் புறம் தேவாசீர்வாதத்தின் மூத்த மகன் கனம். ஜான் டேவிட் ஐயரவர்களின் நினைவாக அவர்களது மனைவி மற்றும் பிள்ளைகளால் ஒரு லட்சம் செலவில் கட்டப்பட்ட மண்டபம் அவர்களது மருமகன் கனம். ஜான் கமலேசன், சேகரத் தலைவர் கனம்.ஆபிரகாம் செல்வராஜ், சபை ஊழியர் திரு ஐசக் ராஜரத்தினம் முன்னிலையில் கனம்.J. பால்ராஜ் ஐயரவர்களால் 28.09.2009 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## 2009 முதல் தற்போது வரையிலான சபை வளர்ச்சி

2009 டிசம்பரில் கனம். காந்தையா நல்ல பாண்டி சேகர தலைவராக பொறுப்பேற்றார்கள். 2009 முதல் 2010 வரை திரு.K. ஜோயல் ஹென்றி சபை ஊழியராக பணி செய்தார்கள் அந்நேரம் தேவாலய நூற்றாண்டு 01.03.2010 அன்று கொண்டாடப்பட்டது. நெல்லை பேராயர் மகாகனம் ஜே.ஜே.கிறிஸ்துதாஸ் அவர்கள் தேவாலய நூற்றாண்டு ஆராதனையை நடத்தினார்கள். 2010 - 2011 இல் சேகர தலைவர் ஆக கனம்.பாக்கியராஜ் பணி செய்தார்கள். அவர்கள் தேவாலய நூற்றாண்டை முன்னிட்டு 3 திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள்.

1.தூண்கள் இல்லாத 100 × 40 நீள அகல புதிய தேவாலயம், 2 கல்லிடைக்குறிச்சி சபை வரலாற்றை உள்ளடக்கிய மாதாந்திர காலண்டர். 3. கல்லிடைக்குறிச்சி தேவாலய படம், மிஷனரி ரேனியஸ் படம், கார் மிஷனரி படம் உள்ளடக்கிய லேமினேஷன் வாக்குத்தத்த போர்டு.

புதிய தேவாலயம் கட்ட திரு.J.ஆனந்தம் அன்புராஜ், திரு .T. இஸ்ரவேல் ஜேசு ஆகியோரைப் பொருளாளர்களாகக் கொண்ட 10 பேர் கொண்ட குழுவை நியமித்து. 2011 ஜனவரியில் நடைபெற்ற கல்லிடைக்குறிச்சி சேகர கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது. பழைய தேவாலயத்தை அப்புறப்படுத்துவதற்கு ஆயத்தமாக 01.03.2011 அன்று அதிகாலை 5 மணிக்கு திருவிருந்து நடத்தி அனைவருக்கும் பாயாசம் வழங்கப்பட்டது. கனம்.A. பாக்கியராஜ் காலத்தில் புதிய தேவாலயத்திற்கு வலிமையான அடித்தளம் அமைக்கப்பட்டது. 2011 அக்டோபரில் சேகர தலைவர் ஆக கனம்.T.J.K.பர்னபாஸ் பொறுப்பேற்றார்கள். இவர்களின் காலத்தில் சிறியதாக கட்டப்பட்டிருந்த ஆல்டர் பெரிதாக்கப்பட்டது. 2012 பிப்ரவரியில் நற்செய்திப் பணித்துறை கண்காணிப்பாளராக இருந்த Rev. D. பாஸ்கர் கனகராஜ் கல்லிடைக்குறிச்சி சேகரதலைவராக பொறுப்பேற்றார்கள் சபை மக்களை தேவாலயக் கட்டுமானப் பணிக்காக கொடுக்கவும் கட்டுமானப் பணிகளை வேகப்படுத்தவுமான பணியை கனம்.D.பாஸ்கர் கனகராஜ் சிறப்பாகச் செய்தார்கள். 26.05.2013 அன்று சேகர தலைவர் கனம்.D.பாஸ்கர் கனகராஜ், சபை ஊழியர் திரு.ஜேம்ஸ் பிராங்கிளின் முன்னிலையில் பேராயர் மகாகனம். ஜே.ஜே கிறிஸ்துதாஸ் அவர்களால் சுமார் இரண்டு கோடி

செலவில் கட்டப்பட்ட புதிய தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின் விழாமலர் வெளியிடப்பட்டது.

2014 பிப்ரவரியில் நடைபெற்ற கல்லிடைக்குறிச்சி சேகர கமிட்டியில் புதிய தேவாலய கோபுரம் கட்டுவது, கோபுர கட்டுமானக் குழுவின் பொருளாளர்களாக திரு T. கோயில் பிள்ளை மற்றும் திரு. J ஜான் ஞானராஜ் ஆகியோர் செயல்படுவது என தீர்மானிக்கப்பட்டது. கோபுர கட்டுமான பணி 26 .05 .2014 அன்று கனம். ஐ.டி.எஸ். ஆபிரகாம் ஐயரவர்களால் ஜெபித்து தொடங்கப்பட்டது. 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 150 அடி உயர தேவாலய கோபுரம் கல்லிடைக்குறிச்சி சேகர தலைவர் கனம் T. சாமுவேல், சபை ஊழியர் திரு.ஏசாயா இரத்தினவேல்




பாண்டியன் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம், ஜே .ஜே கிறிஸ்துதாஸ் அவர்களால் 26 .05 .2016 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதிஷ்டை ஆராதனைக்கு பின்பு J.ஜான் ஞானராஜால் எழுதப்பட்ட History of Christianity in Kallidaikurichi மற்றும் Protestant Christianity in Kallidaikurichi எனும் இரு ஆய்வு நூல்கள் ஜெபித்து வெளியிடப்பட்டது.

கல்லிடைக்குறிச்சி கிறிஸ்து ஆலயத்தின் கீழ்புறம் 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கனம். ரேனியஸ் பல்நோக்கு கூடாரம் 11.08.2019 இல் சேகரத் தலைவர் கனம்.E. ஜான் கிப்ஸன், சபை ஊழியர் திரு.ஏசாயா இரத்தினவேல் பாண்டியன் முன்னிலையில் திருமண்டல துணைத் தலைவர் கனம்.பீட்டர் தேவதாஸ் ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2021-2022 இல் கல்லிடைக்குறிச்சி சேகர குருமனை மேல் மாடியில் ஊழியர்கள் தங்கும்படிக்காக கழிவறை மற்றும் குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட சிறப்பு அறை கட்டப்பட்டது.

## இன்றைய கல்லிடைக்குறிச்சி திருச்சபை


இன்றைய கல்லிடைக்குறிச்சி சபை சேகர தலைமை இடமாகவும், 300 குடும்பங்களைக் கொண்ட பெரிய சபையாகவும் 16 மிஷனரிகளையும் 45 ஆதிவாசி குழந்தைகளையும் தாங்கும் மிஷனரி திருச்சபையாகவும் காணப்படுகிறது.

## அருள்திரு. இராக்லாந்து நினைவு நூற்றாண்டு நினைவு ஆலயம்

# T. பொம்மிநாயக்கன்பட்டி ஆலய வரலாறு

**அருள்திரு. G. P. இராஜா**

மணியகாரன்பட்டி குருசேகரம்
மேற்கு வட்டகை மன்றம் (தெற்கு)
மதுரை – இராமநாதபுரம் பேராயம்



**நற்செய்தி மற்றும் மிஷனெரி ஊழியங்கள் :**

1834 ஆம் ஆண்டு காலத்தில் மதுரை-அமெரிக்கன் மிஷனெரிகள் பெரியகுளம், வத்தலக்குண்டு, கொடைக்கானல், கோம்பை, போடி, ஆண்டிப்பட்டி, மணியகாரன்பட்டி பகுதிகளை மையமாக வைத்து அதை சுற்றியுள்ள அநேக கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அப்பகுதிகளில் ஒன்று T. பொம்மிநாயக்கன்பட்டி கிராமம் ஆகும். அப்படி நற்செய்தி அறிவிப்பதில் பல இன்னல்கள், அவமானங்கள், அவமான பேச்சுகள் என்று பல பிரச்சனைகளின் மத்தியில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து மூணார் குருசேகரத்தின் மூலமாக பல இடங்களில் நற்செய்தி பணி குழுக்கள் சென்று நற்செய்தி அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கும் பணியில் T. பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தை தத்தெடுத்து நற்செய்தி பணி செய்தார்கள்.

1921 முதல் 1923வரை காலத்தில் பொம்மிநாயக்கன்பட்டியில் இடம் வாங்கி, ஆலயம் கட்டப்பட்டது. 1925ஆம் ஆண்டில் இவ்விடத்தை அரசு பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. ஆலய கட்டுமான பணியில் மூணார் குருசேகரம் மற்றும் சில எஸ்டேட் மேலாளர்கள் இவ்வாலயத்திற்கு உதவிகளை செய்துள்ளார்கள். பொம்மிநாயக்கன்பட்டியில் ஆலயத்தில் பள்ளிக்கூடம் நடத்தப்பட்டது. இப்பள்ளியில் படித்தவர்கள் இன்றும் பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்தில் இருக்கின்றார்கள்.

இதனை தொடர்ந்து கம்பம் பள்ளதாக்கு மிஷனெரிப்பணி ஆண்டிபட்டியை மையமாக வைத்து T. பொம்மிநாயக்கன்பட்டியிலும் செய்யப்பட்டது. இப்பணியில் முதல் மிஷனெரியாக திரு. V. செபஸ்டியான் அவர்கள் 1986ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டார். இவர் பொம்மிநாயக்கன்பட்டி அதை சுற்றியுள்ள கிராமங்களில் நற்செய்தி பணியை செய்தார். ஆண்டிபட்டி குருசேகரம் மையமாக வைத்து பொம்மிநாயக்கன்பட்டி, T. சுப்புலாபுரம், மணியகாரன்பட்டி, ஏத்தக்கோயில், கொண்டமநாயக்கன்பட்டி, மறவபட்டி போன்ற கிராமங்களில் நற்செய்தி பணியை செய்தார். அனைத்து கிராமங்களிலும் கைபிரதி ஊழியம், படக்காட்சி, வீடு சந்திப்பு, பொது இடங்களில் தெரு பிரசங்கம் மூலம் நற்செய்தியை India Campus Crusade for Christ அவர்களுடன் இணைந்து ஊழியத்தை செய்தார். இந்த நற்செய்தி பணியில் திரு. தாமஸ் தங்கதுரை, தற்போதைய (2023 WLC (N) சேர்மனாகயிருக்கும் அருள்திரு. ரவிசந்திரன் அவர்களும், திரு. A. அருள்ராஜ், திரு. ஏசுதாஸ், திரு.ராஜேஷ் போன்ற நபர்கள் இணைந்து படகாட்சி, கைப்பிரதி ஊழியத்தின் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டது.

திரு. செபஸ்டியான் மிஷனெரியை தொடர்ந்து திரு. சாமுவேல் மிஷனெரி T. பொம்மிநாயக்கன்பட்டியில் நியமனம் செய்யப்பட்டார். திரு. சாமுவேல் அவர்கள் நற்செய்தி பணியை T. பொம்மிநாயக்கன்பட்டி கிராமத்திலும், அதை சுற்றியுள்ள கிராமத்திலும் அறிவித்தார். இவருடைய காலத்தில் அநேகர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்தார்கள். குடும்பமாக வீடு வீடாகச்சென்று கைப்பிரதி ஊழியம், தனிநபர் சந்திப்பு ஊழியம், வீடு சந்திப்பு ஊழியம் நடைபெற்றது. திருச்சபையில் நல்ல பாடல்கள் பாடுவதின் மூலம் திருச்சபை மக்களை கவர்ந்து இழுக்கப்பட்டு அனைவருடைய உள்ளத்திலும், இல்லத்திலும் ஒரு குடும்ப நபராக திகழ்ந்தார். சில காலம் ஊழியத்திற்கு பிறகு எதிர்பாராதவிதமாக விபத்தில் தன் உயிரை கடவுளுக்கென்று அர்ப்பணித்தார்.

திரு. சாமுவேல் மரணத்திற்கு பிறகு திரு. அமுதானந்தம் மற்றும் அவருடைய மனைவி திருமதி. ஜேசுமேரி அவர்கள் இரண்டுபேரும் இணைந்து திருச்சபையில் மிஷனெரி பணியை செய்தார்கள். இதற்கு இடையில் இதே திருச்சபையில் அருள்திரு. எட்வின் ஏசுராஜா அவர்கள் மூலமாய் இரட்சிக்கப்பட்ட திரு. பாண்டியராஜன் அவர்கள் குடும்பமாய் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் கோயில் பணி, வீடு சந்திப்பு, நற்செய்தி பணி, கைப்பிரதி ஊழியம், தெருபிரசங்கம், படக்காட்சி மற்றும் சிறுவர் ஊழியத்தை சிறப்பாக செய்து வந்தார்கள். இப்பணியை கடவுள் அங்கிகரித்தார். திருமண்டில இளையோர் திருச்சபையின் மூலம் நடைபெறும் விடுமுறை வேதாகமப் பள்ளி ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் திரு. பாண்டியராஜன் அவர்களும் அவருடைய இரண்டு பெண் பிள்ளைகளும் இணைந்து VBSயை நடத்துவார்கள். இதனால் இவர் திருமண்டிலத்தின் மூலம் HMS மிஷனெரியாக ஆண்டிபட்டி குருசேகரத்தில் முழு ஊழிய பணி செய்ய வாய்ப்புகள் கிடைத்தது. அவருடைய மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் அனைவரும் இணைந்து கடவுளுக்காக திருப்பணியை செய்து வருகின்றார்கள்.

**சிறுவர் ஊழியம்:**

நற்செய்தி பணி செய்த அனைவரும் ஆரம்ப காலத்தில் சிறுவர் ஊழியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். இப்பணியை மரத்துக்கு அடியில், பொது இடங்களில், சாவடியில், வீட்டு திண்ணைகளில் சிறுவர்களை அழைத்து அவர்களுக்கு கதை, வசனம், விளையாட்டு, பாடல், படக்காட்சி போன்ற செயல்கள் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. மூணார் பகுதியிலிருந்து வந்த எஸ்டேட் ஊழியர்கள் இப்பணியை செய்ய உற்சாகமூட்டப்பட்டது. சிறுபிள்ளைகளுக்கு பரிசுகள், கல்வி உதவி தொகை, மாலை நேரக்கல்வி மூலம் நற்செய்தியை சிறுபிள்ளைகளுக்கு அறிவிக்கப்பட்டது. திரு. இராக்குமுத்து என்ற இராக்லாந்து அவருடைய மகன் திரு. அருள்தேவதாசன் அவர்கள் அநேக சிறுபிள்ளைகளுக்கு கல்வியை கற்றுக்கொடுத்தார். கல்விக்கு உதவி தொகை கொடுத்து நல்ல படிக்க வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்ட நாட்களாக சிறுவர் ஊழியம் மிகவும் பின்தங்கி போனது. சிறுவர் ஊழியத்திற்கு முக்கியத்துவமில்லாமல் போனது. 2022ஆம் ஆண்டு ஆலயம் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டாலும், இந்த ஆண்டு சிறுவர் ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற தரிசனத்தோடு விடுமுறை வேதாகமப் பள்ளி நடைபெற்றது. திரு. எபிநேசர் வீட்டில் வைத்து திருமதி. டயனா மற்றும் செல்வி. ஜெயகிறிஸ்டி அவர்களும் இணைந்து சிறப்பாக நடத்திக்கொடுத்தார்கள். சிறுவர் ஊழிய நிறைவு நாளில் கலை நிகழ்சிகள் பிள்ளைகள் நடித்தக்காட்டினார்கள். பிள்ளைகளுக்கு பரிசு பொருட்களை அருள்திரு. G. P. ராஜா அவர்கள் வழங்கினார். திருச்சபை மக்கள் நல்ல உற்சாகமாக காணிக்கைகளை கொடுத்து பரிசு பொருட்களை வாங்கி கொடுத்தார்கள். அதைப்போல் 2022 டிசம்பர் மாதம் கிறிஸ்மஸ் மர விழாவும் சிறுவர்களுக்கென்று சிறப்பாக நடைபெற்றது. 2023 ஆம் ஆண்டும் விடுமுறை வேதாகமப்பள்ளி நடைபெற்றது. கிறிஸ்தவ பிள்ளைகள் மற்றும் கிறிஸ்தவ அல்லாத பிள்ளைகளும் கலந்து கொண்டார்கள். இப்பணியை உபதேசியர் திரு. காந்தி மற்றும் திருமதி. டயானா, செல்வி. ஜெயகிறிஸ்டி சிறப்பாக நடத்தி கொடுத்தார்கள்.

**பெண்கள் ஊழியம்:**

மதுரை அமெரிக்கன் மிஷன் பணியில் பெண்களை சந்தித்து நற்செய்தி அறிவித்தார்கள். அதை தொடர்ந்து மூணார் நற்செய்தி பணி குழுவும் இப்பணியை தொடர்ந்து

செய்தார்கள். 1921 ஆண்டு முதல் 1938 ஆம் ஆண்டு வரை குடும்பமாக திருமுழுக்கு பெற்றதில் அநேக குடும்ப தலைவிகள் மற்றும் பெண் பிள்ளைகள் அதிகமாக திருச்சபையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இக்கிராமத்தில் தண்ணீர் எடுக்க வெகுதூரம் பெண்கள் செல்வதினாலும், உயர் குடிமக்களிடத்தில் அனுமதிக்காததினாலும் மூணார் நற்செய்தி பணி குழு பொம்மிநாயக்கன்பட்டி கிறிஸ்தவ ஆலயத்திற்கு முன் இடது பக்கத்தில் ஒரு கிணறு வெட்டி அதிலிருந்து தண்ணீர் எடுக்க பெண்களுக்கு இக்கிணறு உதவிகரமாக காணப்பட்டது. அந்த கிணறுக்கு இக்கிராம மக்கள் 'இயேசு கிணறு' என்று பெயர் சொல்லி அழைப்பார்கள். அனைத்து சமுதாய பெண்களும் இந்த கிணற்றில் தண்ணீர் எடுத்து பயன்பட்டார்கள். தற்போது இந்த இடத்தில் அரசு நூலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. அதுவும் தற்போது பயன்பாட்டில் இல்லை. ஆலயத்தில் மூணார் நற்செய்தி பணிக்குழுவின் மூலம் ஆலயத்தில் கல்வி பணியை தொடங்கினார்கள். திரு. இராக்குமுத்து என்ற இராக்லாந்து என்பவர்தான் முதல் ஆசிரியராக பணியாற்றினார்.

இக்கிராமத்தில் அநேக பெண் பிள்ளைகளுக்கு கல்வி பணியும், நற்செய்தி பணியும் செய்து அன்றைய நாட்களில் அநேகர் கிறிஸ்துவின் வழியில் வழிநடத்தினார்கள். திரு. இராக்குமுத்து என்ற இராக்லாந்து மூணார் பகுதிக்கு சென்றபிறகு திரு. பாக்கியநாதன், திரு. ஒண்டிவீரன் என்பவர்கள் சில காலம் ஆலயத்தை முடிந்தளவு பராமரித்தார்கள். நீண்ட நாட்களாக இவ்வாலயம் வெறிச்சோடி காணப்பட்டது. மீண்டும் திரு. இராக்குமுத்து என்ற இராக்லாந்து அவர்களுடைய மூன்றாவது மகன் திரு. அருள் தேவதாசன் அவர்களும், அவருடைய துணைவியார் திருமதி. மரியம்மாள் அவர்களும் இக்கிராம பெண்களுக்கான ஜெபத்திலும், பெண்களை படிக்கும் கல்விப்பணியிலும், பெண்களுக்கு ஆங்கிலத்தில் மாலைநேரக் கல்வியும், பெண்களுடைய முன்னேற்றத்திற்கு உதவி பணியும் அவர்களால் முடிந்தளவு செய்து வந்தார்கள். அதன்பிறகு HMS மிஷனெரியாக திரு. செபஸ்டியான், திரு. சாமுவேல், திரு. அமுதானந்தம் போன்ற மிஷனெரிகளும் மற்றும் திருமதி. ஜேசுமேரி அமுதானந்தம் வேதாகம பெண் அவர்களும் பெண்கள் ஊழியத்தை குருவானவர் ஆலோசனையின்படி திருமண்டில பெண்கள் சங்க வழிநடத்துதலின்படி பெண்கள் ஊழியம் நடைபெற்றது. திருமண்டிலத்தில் நடைபெறும் பெண்கள் ஐக்கிய ஞாயிறு, மங்களவாக்கு திருநாள், செப்டம்பர் கன்வென்சன், கடைநாணய ஆராதனை, சிறப்பு கூட்டங்கள், உபவாச ஜெபம், கூடி ஜெபிப்பது, வீட்டு ஜெபம், திருமறைத்தேர்வு போன்ற நிகழ்வுகளில் தற்போதுவரை பெண்கள் கடைபிடித்து பெண்கள் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**உபதேசியர் பணி**

திரு. இராக்கமுத்து என்ற இராக்லாந்து 1881 ஆம் ஆண்டு பொம்மிநாயக்கன்பட்டியில் பிறந்தவர். இந்து பின்னணியில் பிறந்தவர் இவர் 7ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கும் மதுரை-அமெரிக்கன் மிஷனில் பணி செய்த அருள்திரு . லாயிட் லார்பீர் (Lyod Lorbir) அவர்களுக்கும் அதிக நட்பு ஏற்பட்டது. இதனால் இராக்கமுத்து என்ற பெயரை மாற்றி இராக்லாந்து என்று திருமுழுக்கு பெற்றார். இப்பெயரை லாயிட் லார்பீர் அவர்கள் பெயர் சூட்டினார்.

1913 ஆம் ஆண்டில் மூணார் திருச்சபையின் மூலம் T. பொம்மிநாயக்கன்பட்டியில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அந்த ஊழியத்தின் மூலம் மூணார் நண்பர்களுடன் நட்பு உண்டானது. சிலர் நட்பு உறவுகளுடன் மூணார் சென்றார்.

இவர் மூணார் எஸ்டேட்டில் கோல் போர்டர் (Goal Border) ல் வேலை கிடைத்தது. வேலையின் நிமித்தம் சென்றதினால் அதிக வரவேற்பு மக்களிடம் கிடைத்தது. இதற்கு காரணம் இவருடைய பெயர் இராக்லாந்து என்பதுதான்.

**பென்சமின், தேவதாசன்**

இவர் மூணார் பகுதியிலுள்ள மரியம்மாள் என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டார். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஐந்து ஆண் குழந்தைகளும் பிறந்தார்கள். 1. திருமதி. சொர்ணம்மாள், 2. திரு. அருளாந்தம் சாமுவேல், 3. திரு. அருள் அலங்காரம், 4. திரு. அருள் தேவதாசன், 5. திரு. டேவிட் செல்லத்துரை, 6. திரு. ஜான் 7. திருமதி. பாக்கியம், ஆகிய ஏழு குழந்தைகள் பிறந்தார்கள். (திரு. அருள் அவர்களை தவிர இன்று வரை (2023) யாரும் உயிருடன் இல்லை எல்லாரும் கர்த்தருக்குள் மரித்துவிட்டார்கள்). அனைத்து பிள்ளைகளும் பல இடங்களில் பரவியிருக்கின்றார்கள். திரு. இராக்லாந்து அவர்களுக்கு மூணார் எஸ்டேட்டில் திரு. D. M. சாமுவேல் அவர்களுடன் நல்ல நட்பு ஏற்பட்டது. இவர்களுடைய கடையில் வேலை பார்த்துக்கொண்டு அவர்களுடைய வீட்டில் தங்கி வேலை பார்த்துக்கொண்டியிருக்கும் போதுதான். இவருடைய முயற்சியால் கோல் போட்டர் (Goal Border) ல் வேலை கிடைத்தது. பின்பு ஆசிரியர் பயிற்சி பெற்று எல்லப்பட்டி எஸ்டேட்டில் கல்வி பணியை தொடங்கினார்.

**அன்றைய நாட்களில் ஆசிரியர் பணிக்கு தகுதியான அடிப்படைகள்:**

1. வேதம் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
2. ஜெபம் செய்ய தெரிந்திருக்க வேண்டும்.
3. பாடல் பாட தெரிந்திருக்க வேண்டும்.
4. செய்தி கொடுக்க தெரிந்திருக்க வேண்டும்.

திரு. இராக்லாந்து அவர்களுக்கு இந்த நான்கு அடிப்படைகள் தெரிந்ததினாலும், இவர் நற்செய்தி பணியை அனைத்து பகுதிகளிலும் கைபிரதி, வேதம், வேதம் சார்ந்த புத்தகங்கள் கொடுத்ததினால் திரு. தேவதாசன் (Chief Secretary) 1942 ஆம் ஆண்டு ஆசிரியர் பணியில் சேர்த்துக்கொண்டார். திரு. தேவதாசன் அவர்களை நினைவு

கூறும் வண்ணமாக தன்னுடைய மூன்றாவது மகனுக்கு தேவதாசன் என்று பெயர் சூட்டினார்.

திரு. இராக்லாந்து முதன் முதலில் எல்லப்பட்டி எஸ்டேட்டில் ஆசிரியர் பணியை தொடங்கி சோலை மலை எஸ்டேட், அருவிகாடு எஸ்டேட் நிறைவாக கிரகாம்ஸ் லேண்ட் எஸ்டேட்டில் கல்வி பணியும், இறைப்பணியும் செய்தார். திரு. இராக்லாந்து தன்னுடைய 58வது வயதில் பணி நிறைவு 6 மாதத்திற்கு முன்பே 1957 செப்டம்பர் மாதம் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். மூணார் எஸ்டேட் சுற்றியுள்ள 28 எஸ்டேட்டுக்கும் திரு. இராக்லாந்து என்பவர் ஒரு மிஷனெரி பணியை கல்வி பணியுடன் இணைந்து செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**அவர் ஊழியம் செய்த எஸ்டேட்:**

1. மூணார், 2. அருவிகாடு, 3. சிட்டி வரை, 4. செண்ட் வரை, 5. குண்டு மலை, 6. கூடார வளை, 7. கடலாறு வலை, 8. கல்லாறு, 9. கண்ணி மலை, 10. நல்லதண்ணி, 11. தேவிகுளம், 12. பெரியகாணல், 13. லெட்சுமி எஸ்டேட், 14. செவன் மலை, 15. சொக்கநாடு, 16. எல்லபட்டி, 17. வாக வரை, 18. நயம்மகாடு, 19. ராஜ மலை, 20. சோத்துபாரை, 21. குண்டு மலை, 22. மாட்டுபட்டி, 23. சைலண்ட் வேலி, 24. நெத்தி கொடி, 25. தென்மலை, 26. கிரகாம்ஸ் லேண்ட், 27. பெரிய வரை, 28. சோலை மலை.

மிஷனெரி பணிதளம் ஆணைக்கால்பட்டி மற்றும் T. பொம்மிநாயக்கன்பட்டியில் திரு. இராக்லாந்து கல்வி பணியும், ஆசிரியர் பணியும் செய்து அநேக பிள்ளைகளை கல்வியை கொடுத்த பொம்மிநாயக்கன்பட்டியின் கல்வி தந்தை ஆவார்.

T. பொம்மிநாயக்கன்பட்டியில் கல்விக்காகவும், ஆராதனை நடத்த ஆலயமாகவும் இருக்க 1922ம் ஆண்டு மூணார் எஸ்டேட் லேபர் டிப்பார்ட்மெண்ட் மூலம் பொம்மிநாயக்கன்பட்டியில் ஒரு ஆலயமும், அதன் அருகில் ஒரு கிணறும் வெட்டப்பட்டது. இவ்வாலயத்திற்கு நான்கு இரும்பு கேடர் மூணார் எஸ்டேட்டில் நான்கு மேனேஜர்கள் நன்கொடையாக வழங்கினார்கள். இவ்வாலயத்தை 1923 ம் ஆண்டு திறக்கின்ற நாளில் மூணாரிலிருந்து திரு. D. M. சாமுவேல் அவர்கள் வந்தார்கள். இவர் அனைத்து பள்ளிகளுக்கும் நிர்வாகியாகயிருந்தார். இந்த கட்டிடத்தில் கல்வியை கற்றுக்கொடுத்து, நற்செய்தியின் மூலம் கிறிஸ்துவை அறிவிக்கப்பட்டது.

மூணார் எஸ்டேட் அனைத்து ஊழியர்கள் மூலமாக கட்டப்பட்ட கிணற்றை கிராம மக்கள் வேத கோயில் கிணறு என்று அழைப்பது உண்டு. பின்னாட்களில் இந்த கிணறு கிராம மக்கள் மற்றும் ஊர் நாட்டாமையினால் மூடப்பட்டு, அரசு பொது நூலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மூணார்க்கு உட்பட்ட பகுதியான பொம்மிநாயக்கன்பட்டி, அடைக்கம்பட்டி, கண்டமனூர், T. சுப்புலாபுரம், M. சுப்புலாபுரம் ஆகிய திருச்சபைகள் 1947 செப்டம்பர் 27 ம் தேதி CSI. திருச்சபை உருவான பிறகு மதுரை முகவை திருமண்டிலத்தோடு இந்த ஆலயம் இணைக்கப்பட்டு, தேனி - ஆண்டிப்பட்டி ஒருங்கிணைந்த குருசேகரத்தோடு இணைக்கப்பட்டது. 1969 ஆம் ஆண்டு திரு. இராக்லாந்து மனைவி திருமதி. மரியம்மாள் அவர்கள் இந்த கிணற்றில் தண்ணீர் எடுத்து சமைத்து, அனைவரும் தண்ணீர் பருகின நாட்களை அவர்களுடைய மகன் திரு. தேவதாசன் அவர்கள் சாட்சியாக பகிர்ந்து கொண்டார்.

1988 ஆம் ஆண்டு ஜீலை 31ம் தேதி திரு. இராக்லாந்து மனைவி திருமதி. மரியம்மாள் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவருடைய நல்லடக்கம் CSI. T. பொம்மிநாயக்கன்பட்டி கல்லறைத்தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. திரு. இராக்லாந்து மனைவி திருமதி. மரியம்மாள் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்த பிறகு, தன்னுடைய பெற்றோர் செய்த திருப்பணியை மூன்றாவது மகன் திரு. தேவதாசன் அவர்கள் 1988 முதல் 2014ம் ஆண்டு டிசம்பர் 31 ம் தேதி வரை T. பொம்மிநாயக்கன்பட்டி ஆலய பணியை தொடர்ந்து செய்தார்.

**தந்தையின் வழியில் மூன்றாவது மகன் திரு. R. அருள் தேவதாசன் உபதேசியர் பணி :**

1933 ஆம் ஆண்டு செப்டம்பர் 26ம் தேதி சிட்டிவரை எஸ்டேட்டில் பிறந்தார். இந்த எஸ்டேட்டில் இவருடைய தகப்பனார் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். சிட்டிவரை எஸ்டேட்டில் 1ம் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு படித்தார். 5ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை வத்தலக்குண்டு பள்ளியில் விடுதியில் தங்கி படித்தார். 1952 1953 வரை 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு வரை படித்தார். அன்றைய BUC படிப்பு 1954ஆம் ஆண்டு தன்னுடைய 21வது வயதில் எஸ்டேட்டில் வேலை செய்ய சென்றார். (ஏனென்றால் 21வது ஆனால்தான் கம்பேனியில் சேர்த்துக்கொள்ளுவார்கள்). 1957 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தன்னுடைய தகப்பனார் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவர் ஓய்வு பெறுவதற்கு 6 மாதம் முன்பே மரித்தார். 1958 ஆம் ஆண்டு முதன்முதலில் மூணாரில் பெட்டிமுடி எஸ்டேட்டில் தன் வேலையை தொடங்கினார்.

1958 முதல் 1964 வரை அவர் பார்த்த பள்ளியில் அங்கீகாரம் இல்லாமல் வேலை செய்தார். 1964 முதல் 1969 வரை அங்கீகாரம் கிடைக்க பல முயற்சிகள், மேல் அதிகாரிகளுக்கு மனுக்கள், பல உயர் அதிகாரிகளிடம் அங்கீகாரம் கிடைக்க போராடுதல் என்று பல தியாகங்கள் செய்தார். அவருடைய பல முயற்சிகளில் 1969ஆம் ஆண்டு 12 பள்ளிகளுக்கு அங்கீகாரம் கிடைத்தது. இம்முயற்சிக்கு அன்றைய தமிழ் சங்கம் மற்றும் அங்குள்ள MLA உதவிகரமாகயிருந்தார்கள். 1964 முதல் 1980 வரை லெட்சுமி எஸ்டேட் பள்ளியில் கல்வி பணியையும், இறைப்பணியையும் செய்தார். 1969ஆம் ஆண்டு High Range East School Teacher என்ற யூனியனை உருவாக்கி

பள்ளிகளை அங்கீகாரம் பெறுவதற்கு குரல் கொடுத்தார். 1970ஆம் ஆண்டு Kerala Eidet Primary Teacher Union என்ற அமைப்போடு இணைந்து Agreement ஒப்பந்தம் பெறுவதற்கு குரல் கொடுத்தார்.

**எஸ்டேட்**

1980ல் Agreement ஒப்பந்தத்தில் வெற்றியை கண்டார்கள். 1980 முதல் 1985 வரை கூடாரவளை இறைப்பணியையும் செய்தார். பள்ளியில் கல்வி பணியையும், 1985 முதல் 1987 வரை கிரகாம்ஸ் லேண்ட் எஸ்டேட் பள்ளியில் கல்வி பணியையும், இறைப்பணியையும் செய்தார். 1987 ஆம் ஆண்டு மார்ச் 31ம் தேதி ஓய்வு பெற்றார். 1987 ஆம் ஆண்டு சில மாதங்கள் மதுரை மீனாட்சிபுரத்தில் இருந்தார்.

**நிறைவு**

1988 ஜீலை 31ம் தேதி அவருடைய தயார் இறந்தார். இவருடைய உடல் பொம்மிநாயக்கன்பட்டி கல்லறைத்தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. தன் தாயார் இறந்த பிறகு பொம்மிநாயக்கன்பட்டி ஆலயத்திற்கு பின்பு இருக்கின்ற தன்னுடைய சகோதரன் வீட்டில் தங்கியிருந்து ஆலயத்தை பராமரித்துக்கொண்டு வந்தார். பொம்மிநாயக்கன்பட்டி திருச்சபையில் 1988 முதல் 2014ம் ஆண்டு வரை ஊழிய பணியை செய்து வந்தார். 2023ல் இந்தத் திருச்சபை நூற்றாண்டை காண்கிறது. புதிய ஆலயமாக திகழ்கின்றது.

**நூற்றாண்டு நினைவு ஆலயம் (புதிய ஆலயம்)**

1921-1923 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட ஆலயத்தை இடிக்கப்பட்டு 2021ஆம் ஆண்டு புதிய ஆலயத்திற்கான அடிக்கல் மதுரை-இராமநாதபுரம் திருமண்டிலத்தின் கட்டிட கமிட்டி கன்வீனர் அருள்திரு. இம்மானுவேல் அருண் அவர்கள் தலைமையிலும், மேற்கு வட்டகை மன்றம் (தெற்கு) தலைவர் அருள்திரு. ஜான்சன் சாமுவேல் ஏசுதாஸ் மற்றும் ஆண்டிப்பட்டி ஆயர்வட்ட தலைவர் அருள்திரு. ஜஸ்டின் திரவியம் அவர்கள் முன்னிலையிலும் நாட்டப்பட்டது. 2021 முதல் 2023 வரை புதிய ஆலயத்தின் பணிகள் தொடர்ந்தது. 2023 ஏப்ரல் மாதத்தில் முடிவு பெற்றது. 26. 05. 2023 அன்று மதுரை-இராமநாதபுரம் திருமண்டிலத்தின் மகாகனம் பொருந்திய Rt. Rev. Dr. D. ஜெயசிங் பிரின்ஸ் பிரபாகரன் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வாலயத்தை கட்டுவதற்கு T. பொம்மிநாயக்கன்பட்டி திருச்சபை மக்கள் என்னுடன் (அருள்திரு . G. P. , ராஜா) இணைந்து உழைத்தார்கள். T. பொம்மிநாயக்கன்பட்டி திருச்சபைக்களும் மற்றும் அநேக திருச்சபை மக்களும் தங்கள் காணிக்கைகளையும், பொருட்களையும் கொடுத்து ஆலயம் கட்ட உதவினார்கள். கட்டிட பொருளாளராக திரு. S. K. டார் மற்றும் குருசேகர குழு உறுப்பினர்கள் நல்ல ஒத்துழைப்புடன் கொடுத்து சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டது. 01. 06. 2023 அன்று இந்த குருசேகரத்திலிருந்து பழனி நகர் குருசேகரத்திற்கு மாறுதல் பெற்றேன்.


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'** (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**
**A/c Number : 1748 020000 4906**
**Bank name : Federal Bank**
**IFSC code: FDRL0001748**

**ஆசிரியர்**



**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

## கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **‘புத்தக வனம்‘** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.



**christianhistoricalsociety.in/**
**tchsportal.co.in**



செல்: 94433 63760, 99946 32523, 99942 25836

வாடியூர் ரோடு சுரண்டை-627859


Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401